பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 சித்திரை 9 ஷஃபா 12 இதழ் 70

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 22-4-1986

## 'யுத்தநிறுத்தம் அமுல்படுத்த வழிவகைகளை மேற்கொள்க'

### ஹமீத்திடம் இந்தியா வேண்டுகோள்

[புதுடில்லி]

தற்போது செயலிழந்துள்ள யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீண்டும் உறுதியானமுறையில் கடைப்பிடிப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுமாறு, இந்தியா சென்றிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனுப் ஹமீத்திடம் இந்திய தரப்பிலிருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

தற்போது நாடு திரும்பியுள்ள ஜனுப் ஹமீத் இம்மாதம் 17-ம் திகதி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து சுமார் 20 நிமிடங்கள் பேசினுர். அதன்பின்னர் மீண்டும் 18-ம் திகதி சந்தித்தார். பின்னர் அதே இரவு, இலங்கைத் தூதராலயத்தில் அளிக்கப்பட்ட இராப்போசன விருந்தொன்றில் திரு. பண்டாரியைச் சந்தித்த ஜனுப் ஹமீத் சுமார் இரு மணித்தியாலங்கள் அவருடன் பேச்சுவார்த்தை நடத்தினுர். இலங்கையில் அதிகாரத்தை பரவலாக்குவதில் எவ்வளவு தூரம் இலங்கை செயல்படும் என்பது பற்றி இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

(5ம் பக்கம் பார்க்க)

● ஒரு கோடி ரூபாசெலவில் கட்டப்பெற்ற

# சந்நிதிபுதிய தேருக்கு தீ!

# குருக்கள், உதவியாளர் பலி!

## வீடுகள், கடைகள் சாம்பர்!

(யாழ்ப்பாணம்)

**சந்நிதி முருகன் தேர் முற்றுக் எரிக்கப்பட்டது. கோவில் ஐயரும் உதவியாளரும் நிர்வாண நிலையில் சுட்டுக்கொல்லப்பட்டனர். கோவில் சூழலிலிருந்த வீடுகள், கடைகள், மடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.**

சந்நிதி முருகன் தேர் இரு வருடங்களுக்கு முன்னர்தான் பிரபல தென்னிந்திய சிற்பாசாரியார்களைக்கொண்டு கட்டுவிக்கப்பட்டது. ஆறு சக்கரங்களைக் கொண்ட இத்தேர் 45 அடிஉயரமாகும். இதைக்கட்டிமுடிக்க ஒரு கோடிரூபாவுக்கு மேல் செலவிடப்பட்டது இத தேர் சிறப்பிலும், உயரத்திலும் தென்னிந்தியாவின் திருவாரூர்த் தேருக்கு அடுத்ததாக மதிக்கப்பெற்றது.

தேர் தீப்பற்றி எரிவதைப் பார்ப்பதற்காக ஓடிச்சென்ற கோவில் குருக்கள்மாரில் ஒருவரான சின்னையாக்குருக்களும் உதவியாளர் ஒருவரும் ஆயுதப்படையினரால் நிர்வாண்மாக்கப்பட்டுச் சுட்டுக்கொலப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

சந்நிதி கோவில் பூசை முதலான சருமங்களை வழமைபோல் செய்யலாமென அரசு தொலைக்காட்சி மற்றும் வானெலிமூலம் அறிவித்ததைத்தொடர்ந்து குருக்கள் கோவிலுக்குச் சென்றிருந்தாராம். (மா)

● புலிகள் அறிக்கை:

## 7 ராணுவம் பலி!

[யாழ்ப்பாணம்]

தொண்டமானுறு இராணுவ முகாமிலிருந்து புறப்பட்டு நடந்துவந்த இராணுவத்தினர் மீது தமது இயக்க வீரர்களால் மேற்கொள்ளப்பட்ட பலத்த தாக்குதலின்போது ஏழு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே பலியானுர்கள் என்றும் பல இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் ''தமிழீழ விடுதலைப் புலிகள்'' விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் புலிகள் தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை அறிக்கை விபரம் வருமாறு:

'நேற்றுமுன்தினம் பருத்தித்துறை ராணுவத்தினருடனுன நேரடி மோதலின்போது வீரமரணமடைந்த எமது வீரர்களான கந்தன், ரமணன் ஆகியோரது இழப்புக்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே ராணுவத்தினர்மீது இத்தாக்குதல் நடாத்தப்பட்டது.' [மா]

## போராளிகள்-ராணுவம் நேரடி மோதல்!

(வல்வெட்டித்துறை)

தொண்டமானுறு இராணுவ முகாமிலிருந்து செலவச்சந்நிதி நீர்ப்பாசன அணைக்கட்டுப் பாலத்தினூடாக சோவில் பகுதிக்கு வந்த இராணுவத்தினர் நேற்று இரவு அதிகாலை ஆச்சிரமப பின் பகுதியிலுள்ள வீடுகள, கோழிப்பண்ணைகள் சிலவற்றுக்கு பெற்றேல் குண்டுகள் வீசி எரித்ததைத்தொடர்ந்து போராளிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேரடிச் சமர் இடம்பெற்றது.

இராணுவத்துச்குப் பாதுகாப்பளிக்கும்வகையில் நேற்று அதிகாலையில் ஹெலிக்கொப்டர் ஒன்று தொண்டமானுற்றுப் பகுதியைச் சுற்றி வட்டமிடத் தொடங்கியது. அதில் இருந்த சரமாரியானதுப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதுடன் நவீன ரகஎரி குண்டுகளும் வீசப்பட்டன. இதனல் செல்வச் சந்நிதிக் கோவிலடியில் இருந்த மடங்கள் சுவாலைவிட்டு எரிந்தன. வானம்புகை மண்டலமாகக் காட்சியளித்தது அதைத் தொடர்ந்து கடற்பிரதேசத்தில் விமானம் வட்டமிட்டுப் பறந்தது. ஹெலிக்கொப்டர் சூட்டினுல்

[5ம் பக்கம் பார்க்க]

## மீண்டும் முத்திரைத்திட்டம்?

அரசினர் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறும் வெளிநோயாளர்களும், வார்ட்டுகளில் தங்கி இருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களும் இனிமேல் குறிப்பிட்ட பெறுமதியுடைய முத்திரை செலுத்தியே சிகிச்சை பெறும் திட்டம் அமுலுக்கு வருகிறது.

இம்முத்திரைத் திட்டம் பற்றிச் சுகாதார அமைச்சு ஆலோசனை செய்து இதனை மந்திரிசபை அங்கீகாரத்துக்குச் சமர்ப்பித்துள்ளதாகவும், மந்திரிசபையின் அங்கீகாரம் கிடைத்ததும் முத்திரைத் திட்டம் அமுலுக்கு வரலாம் எனவும் தெரியவருகிறது. முத்திரையின் பெறுமதி பற்றிய விபரம் தெரியவில்லை.

முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி ஆட்சியில் இத்திட்டம் நடைமுறையில் இருந்தது தெரிந்ததே [ஐ]

## நேற்று முன்தினம் பருத்தித்துறையில் 5 ராணுவம் பலி!

[வல்வெட்டித்துறை]

பருத்தித்துறையில் நேற்று முன்தினம் முகாமிலிருந்து வெளியேவர முயன்ற இராணுவத்தனர்மீது விடுதலைப போராளிகள் மேற்கொண்ட நேரடி மோதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் சில இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது

இந்த நேரடி மோதலில் போராளிகள் இருவர் மரணமானது தெரிந்ததே.

## 'புலிபாய்ந்த கல்லடி'யில் போராளிகள்-படையினர் பலத்த மோதல்

(மட்டக்களப்பு)

'புலிபாய்ந்தகல்' என்னுமிடத்தில் போராளிகளுக்கும் அதிரடிப் பொலிஸ் பிரிவினருக்கு மிடையில் பலத்த மோதல் இடம்பெற்றது.

நேற்று அதிகாலை 3 மணி தொடக்கம் இப்பகுதியில் ஒரே துப்பாக்கி வெடிச் சத்தங்களும் குண்டு வெடிப்புச் சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன.

கிரான் பகுதியில் தேடுதல் நடவடிக்கையிலீடுபட்டிருந்த அதிரடிப்பொலிஸ்பிரிவினரை, போராளிகள் எதிர்கொண்டு தாக்கிய பொழுது இருபகுதியினரும் நேருக்கு நேர்மோதிக் கொண்டதாகத் தெரியவருகின்றது.

இந்த நேரடி மோதலின்போது படுகாயமடைந்த 15 அதிரடிப் பிரிவுப் பொலிசார் வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இறந்தவர்களின் விபரம்தெரிவிக்கப்படவில்லை. (மா)

## அகதிகளாக நிலாவெளித் தமிழர்

(திருமலை)

திரியாய்ப் பகுதியிலுள்ள கள்ளம்பத்தைக் கிராமத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையால் அங்குவசித்துவந்த தமிழ்க் குடும்பங்கள் வெளியேறிக்கொண்டிருக்கின்றன

நேற்று 25 குடும்பங்கள் நிலாவெளியை நோக்கிச் சென்றுள்ளன. (மா)

## ஒரு வயோதிப மீனவரின் பரிதாப மரணம்!

(வல்வெட்டித்துறை)

வழக்கமாக மீன்பிடிக்கும் இடத்தில் கடலில் வலைவீசி மீன்பிடித்துக் கொண்டிருந்த வயோதிபர் 67 வயது) வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டுக்கு இரையானுர்.

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி கடலில் வைத்து இச்சம்பவம் நடைபெற்றது அச்சம் காரணமாக இறந்த இ. குமாரசாமி என்ற இவ்வயோதிபரின் சடலம்கடலில் இருந்து மீட்கப்படாத நிலையில அலையோடு மிதந்துமுகாமுக்குச் சமீபமாகச் சென்றதும் கடற்படைக் கப்பலின் உதவியுடன் இராணுவத்தினர் கரை நோக்கி வேட்டு தீர்க்க இராணுவத்தினர் சடலத்தை எடுத்து முகாமுக்குக் கொண்டுசென்றனர்.

## கொழும்பு விஞ்ஞான பீடம் 28-ல்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட வகுப்புகள் இம்மாதம் 28-ம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [செ]

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைதிறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C-1837]

Shetna Farm, Nel Farm, Dickhena Farm சேவற் குஞ்சுகள் 22ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க, சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (C 1859]

நல்ல நிலையில் உள்ள போட்டோ ஸ்ரட் மெசின் (Canon N. P. 50) விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: ''புஸ்ப வில்லா'', ஐயனுர் வீதி, பருத்தித்துறை. [C 1811]

## தேவை

புதிதாகத் தொடங்கும் கூல் பார்-கபேக்கு அனுபவமுள்ள ஆண், பெண் சிப்பந்திகள் தேவை. அத்துடன் கூல் பாருக்குரிய தளபாடம், Deep freezer மற்றும் சாமான்கள் உடனடியாகத் தேவை. தொடர்பு:- ச. சிற்றம்பலம், 100/1, ஸ்ரான்லி வீதி (விக்ரேஸ் அருகாமை) யாழ்ப்பாணம். (C- 1897)

கைத்தறி நெசவு வேலை தெரிந்த பெண் பாலர் உடன் தேவை. ஆறு மாத காலத்தில் மின்தறி வேலை வாய்ப்புண்டு. உடன் நேரில் வரவும், க. நவரத்தினம், யாழ் ரெக்ஸ் இன்டஸ்றீஸ், சித்தன்கேணி. (C 1904)

பனம்தும்பு தரப்படுத்தல் பிடிகட்டுதலில் அனுபவமுள்ள பெண் தொழிலாளர்கள் தேவை. சனிக்கிழமை நேரில் வரவும். தும்புத்தொழிலகம். 40, சப்பல்வீதி, யாழ்ப்பாணம். (C 1907)

## வகுப்புகள்

ரேடியோ அன் ரீவி, வெல்டிங், பிளம்பிங் (நீர்க்குழாய் பொருத்துதல்), மோட்டார் மெக்கானிசம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து புதிய வகுப்புகள் குறைந்த கட்டணத்துடன் 25-4-86, 26-4-86 இல் ஆரம்பமாகின்றன. சான்றிதழ் பெறுமதியானது: Vispa Engineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 1895)

பௌதீகவியல் (88) புதிய வகுப்பு, ஆசிரியர்: N. பத்மநாதன் B. Sc.(Hons) ''அளவீடுகள்'', சனி-ஞாயிறு 7-30 a. m. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. நாகலிங்கம் இன்ஸ்ரிரியூட், நாவலடி லேன், திருநெல்வேலி. Note: மே 24 முதல் ஒளியியல். (C 1905)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

## ஓராண்டு நினைவஞ்சலி

'நற்செயல் புரிந்தவர் நாளும் வாழ்வர்'
'Deeds Live Eternally'



வேலணை

### திருமதி உருக்குமணி இராசரத்தினம்

(இளைப்பாறிய ஆசிரியை)

மலர்வு: 15-06-1914
நிறைவு: 02-05-1985
திதி: 22-04-1986

விந்தையோ ராண்டு காலம்
வீட்டிலே காணவில்லை
சிந்தையில் நிதமும்செய்த
செயலினை நினைப்பதாலே
வந்துநீர் அருவமாக
வாழ்கிறீ ரம்மா, விட்டு
நித்தமாய்ப் பிரிந்தோமென்று
நினைக்கவேமனம்பொருதே

கணவர் வைத்தியர்
இ. இராசரத்தினம் J P.,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றூர், உறவினர்.

'மலரகம்'
வேலணை - 2.

A 606

---

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் அருணாசலம் வேலுப்பிள்ளை இராமநாதன்

(ஓய்வுபெற்ற சிறுப்பர்)

மண்ணுலகம்: 27-10-1919
விண்ணுலகம்: 22-04-1985

எண்ணரும் குணத்தினாலே எவருமே போற்ற வாழ்ந்தீர்
பண்பினால் உயர்ந்தீர் யார்க்கும் பார்க்கும் உதவல் செய்தீர்
கண்ணென எம்மைக் காத்தீர் கதறி நாம் அழவே நீவிர்
விண்ணினை அடைந்தோர் ஆண்டுமே விற்றே இன்று தானே

உங்கள் ஆத்மா சாந்தி அடைய ஆண்டி கேணி ஐயனை வேண்டி நிற்கும்:

அன்பு மனைவி,
மக்கள் பேர்த்தி றஞ்சினி,
சகோதரர்கள்.

முல்லைப்பிலவு,
காரைநகர். A 603

---

## சாரணர் அன்னையர் பாசறை

[பச்சிலைப்பள்ளி]

பளை மகாவித்தியாலயத்தில் இரண்டு தினங்கள் சாரணர் அன்னையர் பாசறை நடாத்தப்பட்டது. முதற் தடவையாக இலங்கையில் சாரணர் அன்னையர் பாசறை பளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

---

## கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு.

## பதவி வெற்றிடம்

### கணக்காளர் தரம் (104. 8)

மேற்காட்டப்பட்டுள்ள பதவிக்கு தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் தலைவர், கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம் முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு 02-05-86ம் திகதிக்குப் பிந்தாமல் பதிவுத்தபால் மூலம்அனுப்புதல் வேண்டும்.

கணக்காளர் தரம் (104. 8)

சம்பளம்-
ரூபா 500/- — 840/-
..............................
20X5—30X8

(அ) கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினரின் சுற்றுநிருப இல. 108/81ல் குறிப்பிடும் 9வது அலகுசம்பளத்தில் கணக்குப் பதிவாளர்அல்லது கணக்கு லிகிதர் அல்லது எண்பார்வை லிகிதர் பதவியில் 3 வருடத்திற்குக் குறையாது கடமையாற்றியவர் அல்லது 10வது அலகு சம்பளத்தில் மேற்படி பதவிகள் ஏதாவது ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாது கடமையாற்றியவர்

அல்லது

(ஆ) ஐக்கியஇராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் கல்வி நிலையத்தினரின் இறுதி ஆண்டுப் பரீட்சைச் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில் நிறுவனங்களில் கணக்கு எண்பார்வைத்துறைகளில் மேற்பார்வைப் பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாது கடமையாற்றிய அனுபவமுடையவர் அல்லது மேற்படி கல்வி நிலையத்தின் இன்டர்மீடியட் பரீட்சைத் சித்தியுடன் அத்தகைய நிறுவனங்களில் மேற்குறிப்பிட்ட பதவிகளில் 4 வருடங்கட்குக் குறையாது கடமையாற்றிய அனுபவமுடையவர்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப் பரீட்சை சித்தி அல்லது க. பொ. த உயர்தரப்பரீட்சையில் கணக்கியல் உட்பட 3 பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகதொழில் நிறுவனங்களில் கணக்கியல் அல்லது எண்பார்வைத் துறைகளில் மேற்பார்வைப் பதவியில் 4 வருடங்கட்குக் குறையாது கடமையாற்றிய அனுபவமுடையவர்.

வயது: 25 — 45 வரை.

குறிப்பு:
மேற்கொண்டு இதுபற்றிய விபரங்கள் தேவைப்படின் கூட்டுறவு வேலையாளர்ஆணைக் குழுவினரின் சுற்றறிக்கை இல: 108/81ஐப் பார்வையிடவும்.

**பொதுமுகாமையாளர்,**
கரைதுறைப்பற்று
ப. நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு.
(A 607)

---

# ஊர்காவற்றுறையில் நடந்த சுகாதாரசேவைபயிற்சிமுகாம்

[வேலணை]

சௌக்கிய சேவைகள் பகுதியும் இலங்கை மனிதமுன்னேற்ற இயக்கத்தினரும் இணைந்து ஊர்காவற்றுறை மாவட்ட சுகாதாரவைத்திய அதிகாரியின் விடுதியில் சுகாதார சேவை தொண்டர்களுக்கான பயிற்ச்சிமுகாமொன்றை நடத்தினர்கள்.

இப்பயிற்ச்சி முகாம் ஒரு மாதகாலமாக நடாத்தப்பட்டது. வருடா வருடம் ஒவ்வொருமாவட்டம் தோறும் நடாதப்தபட்டு வரும் இந்த சுகாதாரசேவை தொண்டர் பயிற்சி முகாம் இவ்வருடம் ஊர்காவற்றுறையில் நடாத்தப்பட்டுள்ளது.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் ஊர்காவற்றுறை, வேலணை, தம்பாட்டி, மெலிஞ்சிமுனை, எழுவைதீவு, நாரந்தனை, அல்லைப்பிட்டி ஆகியபகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட சுமார் 62 இளைஞர்கள் யுவதிகள் பங்குபற்றியிருந்தனர்.

இப்பயிற்சி முகாமிற்கு பொறுப்பாளராக அருட்சகோதரி செல்வி பேட்றன்ட இருந்து கடமையாற்றினர். பயிற்சிக் கருத்தரங்கில் வைத்திய கலாநிதிகளும், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சுகாதார போதனசிரியர்கள் உட்பட பலர்கலந்து கொண்டு உரையாற்றினர்கள்.

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### இராமநாதன் நுண்கலைக்கழகம்

இசைக்கலைமணி/
நாட்டியக்கலைமணி
பயிற்சி நெறிகளைப்

## பயிலுவதற்கான அனுமதி – 1986

மேற்குறித்த கற்கை நெறியினைப் பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் 31-05-1986 வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. விண்ணப்பப்படிவத்தையும், மேலதிக விபரங்களையும் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் ரூபா 10/-க்கான காசுக்கட்டளை அல்லது போஸ்ரல் ஓடரைநேரில் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது சுயவிலாசமிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்பட்டதுமான 23X10 செ. மீ. அளவினதான கடித மேலுறையுடன் ரூபா10க்கான காசுக்கட்டளை அல்லது போஸ்ரல் ஓடரை சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/தேர்வுகள், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
16-04-1986. (A 608)

---

## கம்.இடதுநடாத்தும் மே. தினம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் (இடது] அதனோடு இணைந்துள்ள வெகுஜன ஸ்தாபனங்களும் ஒன்றிணைந்து எதிர்வரும் மேதினத்தை யாழ் நகரில் சிறப்பான முறையில் நடாத்த முடிவு செய்துள்ளன அன்றையதினம் தொழிலாளர்கள், விவசாயிகள், புத்திஜீவிகள், மாணவர்கள், மாதர்கள் கலந்துகொள்ளும் மாபெரும் ஊர்வலமும் கூட்டமும் நடைபெறவுள்ளது.

தொழிலாளி வர்க்கத்தினதும் உழைக்கும் மக்களினதும் மேதின வற்புறுத்தல் என்ற தலைப்பில் பதின்மூன்று அம்சங்களை வலியுறுத்தி துண்டுப் பிரசுரமொன்றையும் மேற்படி கட்சி வெளியிட்டுள்ளது.

---

# நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

## மல்லாகம் மாவட்ட நீதி மன்றம்

வழக்கு இல, ஈடு:5287

முருகர் நாகமணி, தெல்லிப்பழை கிழக்கு -வழக்காளி
பொன்னையா நடேசலிங்கம் பெண்
வசந்தநாயகி, காங்கேசன்துறை -எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்ற கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1986 ம் ஆண்டு வைகாசி மாதம் 9 ம் திகதி 09- 05- 86 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற் குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிகளுக்கு ரூபா 7400/- வும் மேலும் 6000க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 55 வீதம் வட்டி வழக்கு அணைத்த திகதியாகிய 1983 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 6 ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1985 ம் ஆண்டு தை மாதம் 31 ம் திகதி வரையுமான வட்டியும், அதன் பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருட மொன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 5274 70 சதம் இதில் நடைபெற்ற செலவு ரூபா 3156. 70 நடைபெறவேண்டிய செலவு ரூபா 1041 50 மேலதிக சமயா சமயச் செலவு ரூபா 1076.50 கொடுக்க வேண்டியிருப்பதாலும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று பழை இறை ''ஆண்டியன் வளவு'' நிலப்பரப்பு முக்காலும் வீடும் செய்பயிர் வான் பயிர்களும் எல்லை கிழக்கு இராசா பெண் சின்னப்பிள்ளையினுதனம் வடக்கு கையொழுங்கையும் தூர்வை நிலமும் மேற்கு இரத்தினம் பெண் முத்தம்மாவினுதனம் தெற்கு சண்முகம் பெண் முத்தம்மாவினுதனமும் கையொழுங்கையும் இதடங்கலும் இன்னும் தூர்வைப் பங்கும் தூர்வையிலிருக்கும் கிணற்றிற் பங்கும்.

வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை,
5- 3- 86.

க. நவரத்தினம்,
நீதிமன்ற விற்பனையாளரும்,
மதிப்பாளரும்.
(C- 1903)

# பிலிப்பைன்ஸ் இராணுவம் மீது தாக்குதல்: 20 துருப்பினர் பலி!

## அக்கினோ அரசில் முதல் சம்பவம்!!

மணிலா, ஏப். 21

**பிலிப்பைன்ஸில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கெரில்லாத் தாக்குதலொன்றில் இருபது இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பிலிப்பைன்ஸில் திருமதி அக்கினோ அரசாங்கம் பதவியேற்ற பின்னர் இந்நாட்டின் இராணுவம் மீது நடத்தப்பட்ட முதலாவது பெரும் தாக்குதல் இதுவென்று அறிவிக்கப்பட்டுள்ளது. 'என். பி. ஏ.' என்ற பிலிப்பைன்ஸின் கிளர்ச்சிப்படையே இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.**

பிலிப்பைன்ஸ் அதிபர் திருமதி கொரஸோன் அக்கினோ இத்தாக்குதலை வெகுவாகக் கண்டித்துள்ளார் இதுபோன்ற தாக்குதல்களுக்கு எதிராக எதிர்காலத்தில் தாம் கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

புதிய மக்கள் இராணுவம் (என். பி ஏ.) என்ற பிலிப்பைன்ஸின் கெரில்லாக் கிளர்ச்சிப்பிரிவு கடந்த பல ஆண்டுகளாக இந்நாட்டில் இயங்கி வருகிறது.

மார்க்கோஸ்ஆட்சிக்காலத்தில் இதன் நடவடிக்கைகள் தீவிரமடைந்திருந்தன. அத்துடன், அந்த ஆட்சி செல்வாக்கற்றிருந்ததால் இக்கிளர்ச்சிப் பிரிவின் கைஓங்கியிருந்தது. இதில் சுமார் 16 ஆயிரம் பேர் சேர்ந்துள்ளனர்.

திருமதி கொரஸோன் அக்கினோ பிலிப்பைன்ஸ் ஆட்சியைக் கைப்பற்றியதும் இக்கிளர்ச்சிப் பிரிவுடன் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு சமரச முயற்சிகளை முன்வைத்தார்.

அந்தரங்கமாக இயங்கி வரும் கிளர்ச்சியாளர்களைச் சந்திக்கும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. ஆனால் என். பி. ஏ.யினர் இந்த ஏற்பாடுகளைப் புறக்கணித்து வருவதாகவே தெரியவருகிறது.



"பதிலடி கொடுப்பேன்"
— திருமதி அக்கினோ

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தாக்குதல் குறித்து திருமதி அக்கினோ கருத்து வெளியிடுகையில், "பிலிப்பைன்ஸ் மக்களின் பாதுகாப்பு, ஜனநாயக அமைப்பின் காத்திரம், இராணுவத்தின் உறுதிப்பாடு, கௌரவம் என்பன நன்கு பேணப்படும்வகையில் கிளர்ச்சியாளர்கள் நாட்டுநலனில் அக்கறை கொள்ளவேண்டும். இல்லையேல் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார். (கி)

### மகாராணியார் பிறந்த தினம் 6 ஆயிரம் சிறுவர் வாழ்த்து!

[லண்டன்]

பிரிட்டிஷ் மகாராணியாரின் 60-வது பிறந்த தினவைபவம் நேற்று பிரிட்டனில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

அரச குடும்பத் தேவாலயமான சென். ஜோர்ஜ் சாப்பலில் பிரார்த்தனையுடன் இந்தப் பிறந்த நாள் வைபவம் ஆரம்பமானது. இதனையடுத்து அரசபவனியில் அரச குடும்பத்தினர் 'பக்கிங்ஹாம்' அரண்மனைக்குச் சென்றனர்.

எலிசபெத் மகாராணியார் அச்சுறுத்தல்களைப் பொருட்படுத்தாது திறந்த குதிரை வண்டியில் சென்றார். பிரிட்டனையும் பொதுநலவாய நாடுகளையும் சேர்ந்த சுமார் 6 ஆயிரம் சிறுவர்கள் பக்கிங்ஹாம் மாளிகையில் கூடி மகாராணியாருக்கென தாம் விசேடமாகத் தயாரித்த பிறந்ததின வாழ்த்துப் பாட்டைப் பாடினர். (கி)

லிபியா சுட்டுவீழ்த்திய—

## அமெரிக்கவிமான சிதைவுகள் சோவியத் அனுப்பப்பட்டன!

திரிப்பொலி, ஏப். 21

கடந்த செவ்வாய்கிழமை லிபியா மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சின்போது சுட்டுவீழ்த்தப்பட்ட அமெரிக்க போர் விமானமென்றின் சிதைவுகள் கடலிலிருந்து மேலெடுக்கப்பட்டுள்ளன.

இவ்விமானம் லிபிய பீரங்கிப் படைகளால் சுடப்பட்ட 'எவ்-111' ரக போர் விமானம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமெரிக்கபோர் விமானத்தின்சிதைவுகள் சோவியத் யூனியனுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் லிபியஅரசு அறிவித்துள்ளது. சோவியத் யூனியனில் இவ்விமானம் குறித்த தொழில் நுட்பப் பரிசோதனைகள் நடத்தப்படும் என்று கூறப்பட்டது.

இதேவேளை அமெரிக்கவிமானங்களின் குண்டு வீச்சின் போது ஒரு பெரும் தோட்டம் பழச் செய்கைத்தோட்டமும் பாதிக்கப்பட்டது. இங்கு பெரும் ஆழமான துவாரங்கள் குண்டுவீச்சினால் ஏற்பட்டுள்ளன அத்துடன் எடை கூடிய பல குண்டுகளும் வெறுமனே வெடிக்காது வீழ்ந்திருக்கக் காணப்பட்டன.

லிபியாவிலுள்ள உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு இக்குண்டு வீச்சு விளைவுகள் நேரடியாகக் காண்பிக்கப்பட்டன. (கி)

### இலங்கை அகதிகள் கொத்தடிமைகள்!

(சென்னை)

கொடைக்கானலில் இரண்டு தனியார் ஒப்பந்தக்காரர்களிடம், கொத்தடிமைகளாக, இலங்கையில் இருந்து வந்த 44 அகதிக் குடும்பங்கள் வேலைசெய்கின்றனர் இவர்களுக்கு வேதனம் வழங்கப்படுவதில்லை. இவர்கள் நிலைமோசமாகவுள்ளது. என்றும் இவர்களுக்கு விடுதலை அளிக்குமாறு "பர்னலா முத்தி மோர்ச்சா" நிறுவனம் மேல்நீதிமன்றில் மனுதாக்கல் செய்துள்ளது.

இம்மனுவைப் பரிசீலனைசெய்த, மேல்நீதிமன்றம், மனுவில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டு கடுமையானதாக இருப்பதால் தமிழக அரசுக்கு மேல்நீதிமன்றம் இப்புகார்கள் குறித்து விசாரணை நடாத்தி அறிக்கையை இம்மாதம் 27ந் திகதிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளது. இதுபற்றி விசாரணை நடாத்த மதுரையிலுள்ள "சொசைட்டி போர் கம்யுனிட்டி ஆர்கனைசேசன்" என்ற அமைப்பின் டைரக்டர் திரு மெஹபூம் பாச்சா நியமிக்கப்பட்டுள்ளார். (கெ)

"இலங்கைத் தமிழர் பிரச்னை:

## சிறை செல்லவும் தயாராகும் மாபெரும் போராட்டம்!'

— கருணாநிதி எச்சரிக்கை

(சென்னை)

"'இலங்கைத்தமிழர்களுக்காக மாபெரும் பொதுக்கூட்டம் நடக்கவிருக்கிறது. அதற்காக அனைவரும் அதில் கலந்து கொண்டு சிறை செல்ல தயாராக இருக்குமாறு தி மு. க வினரை கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு, தி. மு க. தலைவர் கலைஞர். மு. கருணாநிதி,



செங்கல்பட்டு மாவட்டத்தில் ஊராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற தி மு. க உறுப்பினர்களுக்கு பாராட்டு விழாவும், வாக்காளர்களுக்கு நன்றியறிவிப்பு விழாவும் காஞ்சிபுரத்தில் நடைபெற்றபோது தெரிவித்தார்.

கலைஞர் கருணாநிதி மேலும் பேசுகையில் 'இலங்கையைப் பற்றி பிரதமர் இன்று சண்டிப்பாக பேசுகிறார் என்றால் அதற்கு தி. மு. க பெற்ற வெற்றிதான்காரணம்" என்று அவர் குறிப்பிட்டார். விழாவில் பலரும் இலங்கைப்பிரச்னை பற்றிப் பேசினர். (கெ)

### றீகனுடனான சந்திப்பில் கோபச்சேவ் ஆர்வம்!

கி.பெர்லின், ஏப் 21

"ஆயுதபரிகரணத்தை மேற்கொண்டு, சோவியத் யோசனைகளுக்கு மதிப்பளித்தால் இந்த ஆண்டில் அமெரிக்க, சோவியத்தலைவர்களின் உச்சிமகாநாடு சாத்தியமாகும்" என்று சோவியத் தலைவர் திரு.மிக்கோபச்சேவ் தெரிவத்துள்ளார்.

திரு. கோபச்சேவ் கிழக்கு ஜெர்மனிக்கு விஜயம்செய்துள்ளார். அங்கு பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

லிபியாமீதான அமெரிக்காவின் விமானத் தாக்குதலையடுத்து அமெரிக்காவுடனான உயர்மட்டப் பேச்சுக்களை சோவியத்யூனியன் ரத்துச் செய்திருந்தது.

இப்பேச்சுக்களில் ஒன்று அமெரிக்க ராஜாங்க அமைச்சருக்கும், சோவியத் வெளிநாட்டமைச்சருக்குமிடையே அடுத்தமாதம் நடைபெறவிருந்தது. திரு. றீகன், திரு. கோபச்சேவ் ஆகியோரின் சந்திப்பு குறித்தே இந்த பேச்சில் ஆராயப்படவிருந்தது.

சோவியத் அதிபர் மேலும் கருத்து வெளியிடுகையில் "அமெரிக்கா சர்வதேச அரசியல் சூழ்நிலையை நஞ்சாக்குதலில் ஈடுபட்டுள்ளது சோவியத் யூனியனுடன் பேச்சு நடத்த அமெரிக்கா விரும்பினால், உலகநாடுகளின் நலனையும், ஆயுதக் கட்டுப்பாட்டையும் அதுபேண வேண்டும். இதன் மூலமே சோவியத் அமெரிக்கத்தலைவர்களின் சந்திப்புசாத்தியமாக முடியும் என்றார். [கி]

### வீதிகளில் ஒட்டகங்கள் தொல்லை!

(தெஹ்ரான்)

செல்வம் கொழிக்கும் அபுதாபி, துபாய் நாடுகளில், ஒட்டகங்களின் தொல்லையால் அடிக்கடி நிகழும் வாகன விபத்துகளைத் தடுப்பதற்கு. வீதிகளில் ஒட்டகம் நுழையாமல் இருக்க 140 கிலோ மீட்டருக்கு வேலி போடும் பணி ஆரம்பமாகியுள்ளது. இதற்கு 100 கோடி டாலர் செலவிடப்படவுள்ளது. (கெ)

### மணி வாக்கு

''அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே''.

— திருமந்திரம்.

## நமது நோக்கு

### ஊனமுற்றோர் கல்வி

இந்த நாட்டில் ஊன முற்றோர், வலதுகுறைந்தோர் என்றொரு வர்க்கத்தினர் நீண்டகாலமாக சமுதாயத்துக்குப் புறம்பானவர்கள் என்று ஒதுக்கப்பட்டுவந்தனர்.

இவர்களுக்கென முதன் முதலாக கல்கிசையில் தொடங்கப்பட்ட பாடசாலை இங்கிலாந்தின் திருச்சபையின் எத்தனம் என்பதை பலர் அறியார். கிறிஸ்துவசமுதாயம், அதுவும் மேனாட்டு நிறுவனங்களுக்கு அள்ளி வழங்கும் வள்ளல்கள் கொடையே கண்பார்வையற்ற, செவிப்புலனற்ற வலதுகுறைந்த பிள்ளைகளின் மேம்பாட்டுக்கு உதவிவருகிறது. மேனாட்டுப் பண்பாட்டில் ஒரு முக்கிய அம்சம் தன்னிடத்தில் உள்ளதையெல்லாம் வாரிக்கொடுக்கிற அன்பு.

அவர்கள் கிறிஸ்தவர்கள், மத மாற்றத்தை அடிப்படையாகக்கொண்டு இவ்வித உதவிகளால் தங்கள் மதத்தை வளர்க்கும் பசுத்தோல் போர்த்த புலிகள் என்ற பண்டைய கண்டனத்தில் உண்மையிருக்கலாம் இன்று இந்துமதத்தில் இத்தகைய சமுதாய அநீதிகளை ஒழிக்க எமது நிறுவனங்கள் ஆவனசெய்யத் தவறுவதால், மிஷனரிமாருக்கு எதிரான கண்டனம் வெறும் நொண்டிச் சாட்டாகின்றது.

உலகரீதியில் 'யூனிசெப்' என்ற சர்வதேச சங்கம் இத்தகைய மாணவர்களின் கல்விக்கும் தொழில் அபிவிருத்திக்கும் உருப்படியான சேவைகளை அளிக்கிறது.

இத்துறையிலும் இலங்கை அரசு தனது பாகுபாட்டை காட்டத் தவறவில்லை.

சாதாரண மாணவர்கள் கல்வியில் தகைமைக்குரிய இடமளிக்கத் தவறிய அரசு, வலதுகுறைந்தோர் விடயத்திலும் சிங்கள மாணவர்களின் குறைபாடுகளுக்கு ஆவனசெய்வதில் பிரத்தியேக ஆர்வம் காட்டுவது எவ்வகையிலும் அதிசயமல்ல.

அரசை எடுத்ததற்கெல்லாம் குறைகூறவும் கிறிஸ்தவ நிறுவனங்களின் மகத்துவ சேவைக்கு கண்டனம் திட்டவும் கொடுக்கிழுத்துக்கட்டும் நாம் எமது சமூகத்தில் இந்த துரதிர்ஷ்டத்துக்கு பலியானவர் எத்தனை பேர் என்று, கிராமரீதியிலோ அல்லது தொகுதி ரீதியிலோ தெரியாதவர்களாகவே இருக்கின்றோம்.

எவ்வாறு சில நோய்களைக் 'கர்ம நோயென்று' அதனால் வருந்துகிறவர்களுக்கும் மீட்சியில்லையென்று ஒளித்துவருகிறோமோ, அதேபோல மனநோயாளர், வலது குறைந்தவர்கள் எங்கள் வீடுகளின் மறைப்பிடங்களில் ஒதுக்கப்படுகின்றனர்.

இன்று மனநோய், பிற நோயைப் போல சாதாரணமானதென்று ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைக்குள்ளாகிறது. 'கர்மநோய்' பட்டியல் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. 'கசக்காரக் குடும்பம்' என்ற வடு கருத்தற்றதாய் விட்டது. அதேபோல வலது குறைந்தவர்கள், வலது நிறைந்தவர்களிலும் பார்க்க முன்னேற முடியுமென்பது நிரூபிக்கப்பட்டுள்ளது,

தற்சமயம் கைதடியில் இருக்கும் நபீல்ட் பாடசாலை இன்றைய தேவைகளுக்குப் போதுமானதல்ல; அப்பாடசாலை அடைந்த வளர்ச்சி அற்புதமானது. ஆனால் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித் தனி பாடசாலைகள், அப்பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் என்பன இன்றியமையாத இன்றைய தேவைகளாகும்.

கைதடி மட்டும் போதுமா? சமூகத்தில் காணப்படும் ஊனமுற்றோர் எவரும் தப்பாமல் இக் கல்வித் திட்டத்துக்குள் சேர்க்கப்படவேண்டும்; எனவே இத்திட்டம் விரிவாக்கப்பட்டு தமிழ்ப் பேசும் பகுதிகளில் கூடிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

இத்துறையில்அதிகஅனுபவமுள்ள கல்விமான் திரு கு நேசையா எங்கள் பத்திரிகையில் எழுதிய கட்டுரை பலமுக்கிய தகவல்களையும் கருத்துக்களையும் கொண்டிருப்பதை வாசகர்கள் நிச்சயம் அவதானித்திருப்பார்கள்.

இலங்கைப் பல்கலைக் கழகங்கள் சிலவற்றிலாவது, குறிப்பாக யாழ் பல்கலைக் கழகத்திலாவது திறமைமிக்க மாணவர்கள் தமது குறைக்கேற்ற வசதிகள் கொண்ட நிலையத்தைப் பெற ஆவன செய்யவேண்டும்.

இத்துறையில் விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் மனிதாபிமான அடிப்படையில் இந்தக் கைங்கரியத்துக்குதவமுன்வரவேண்டும்.

எமது சமூகம் இது விடயத்தில் அக்கறை காட்டத் தவறினல் நாம் அநீதிக்குள்ளாவதை எவ்வாறு தடுக்கமுடியும்?

### வங்கிஊழியர் அசௌகரியம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மக்கள் வங்கி புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டதன் காரணமாக அங்கு பணி புரிகின்ற ஊழியர்கட்கு சில அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

வங்கி ஊழியர்களுக்குதண்ணீர் வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை எனவும் மலசல கூடவசதிகளுக்கான அடிப்படைத்தேவைகள் வழங்கப்படாமை காரணமாக வங்கி ஊழியர்கள் பல்வேறு சிரமங்களையும் எதிர் நோக்குகிறார்களாம்.

வங்கிக்கு வருகின்ற வாடிக்கையாளர்கள் தமது துவிச்சக்கர வண்டிகளைப் பாதுகாப்பான இடத்தில் வைப்பதற்கு வேண்டிய இடவசதிகளும் செய்யப்படாமலிருப்பது தெரியவருகின்றது.

# இலங்கைத் தமிழர் பிரச்னை 'லாபநஷ்ட' கணக்கல்ல!

''தமிழர்கள் பிரச்னைக்கு ராணுவ மூலம் முடிவு கட்டுவோம்'' என்று உள்நாட்டிலும் ''அரசியல், ராணுவம் என்ற இரண்டையும் உபயோகிப்போம்'' என்று வெளிநாட்டிலும் பேசுகிறார் ஜெயவர்த்தன.

இலங்கையில் என்ன நிகழ்ந்திருக்கிறது?

திரிகோணமலையில் இன்று தமிழர்கள் பெரும்பான்மையோர் அல்ல. தமிழர்களைக் கொன்று குவிப்பதன் மூலம் திரிகோணமலையில் தமிழர்கள் பெரும்பான்மையாக இருந்த நிலைமையை மாற்றி விட்டார் ஜெயவர்த்தன,

இதை யார் செய்கிறார்கள்? யார் உடந்தை?

இஸ்ரேல் நாட்டு யூதர்கள் யூத ராணுவ ஆலோசகர்கள்; பாகிஸ்தான்நாட்டு ராணுவம்; விமானிகள்.

இஸ்ரேலும் பாகிஸ்தானும் ஜன்மப்பகை கொண்ட நாடுகள். இத்தகைய எலியும் பூனையும் எப்போது எதற்காக நட்பாயினர்? இங்கேதான் விஷயம் இருக்கிறது இவர்களுக்கு ஆசி வழங்கி, தொடர்ந்து பணமும் ஆயுதமும் அளிப்பது அமெரிக்கா!

அமெரிக்காவின் எண்ணமெல்லாம் அதற்கு நிரந்தரக் கப்பற் படைத் தளமாக திரிகோணமலை இருந்தால் நல்லது என்பதுதான். அதைத் தாரை வார்த்துக் கொடுப்பது இலங்கையின் உள்நாட்டு அரசியலுக்கு ஏற்றது என்று ஜெயவர்த்தன தீர்மானம் செய்தார்

இதன் காரணமாக மனித உரிமைகளைக் குழி தோண்டிப் புதைக்கும் ஜெயவர்த்தனக் களைப் பாராட்டுகிறது அமெரிக்கா. உரிமைக்காக- உயிருக்காக-ஜீவப் போராட்டம்நடத்தும் தமிழர்களை வன்முறையாளர்கள் என்று வர்ணிக்கிறது இலங்கையில் நடக்கும் இனப் படுகொலைக்கு இஸ்ரேலையும், பாகிஸ்தானையும் தூண்டி விடுகிறது.

சர்வாதிகாரத்தையும் இனப் படுகொலையையும்தென்னபிரிக்காவில் அனுமதிக்கும் இங்கிலாந்து நாட்டுப் பிரதமர் மார்கரட் தாட்சர், ''தமிழர்கள் கொலைகாரர்கள்!'' என்று பேசுகிறார்.

உலகில் கொலை செய்யப்படுபவர்கள் யார், கொல்பவர்கள் யார் என்பதில் கூட உண்மை காணமுடியாத உலகத் தலைவர்கள்!

இத்தனை கொடுமையும் நமது சகோதர சகோதரிகள் மாய்வதும், நம் தாய்த்தமிழ் நாட்டிற்கு 18 மைல் தொலைவில் நடைபெறுகிறது.

இதை வலுவுள்ள இந்திய அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்கிறது. ''இது அயல்நாட்டுப் பிரச்னை!'' என்று தனக்குத் தானே சமாதானம்செய்து கொண்டிருக்கிறது.

அரேபிய முஸ்லிம் நாடுகளின் ஆதரவை எண்ணி நாம் இஸ்ரேல் நாட்டை என்றும் அங்கீகரிக்கவில்லை. இதை உள்ளத்தில் கொண்டு, இஸ்ரேல் இந்தியாவுக்கு எதிராக இலங்கையில் செயல்படுகிறது.

''தமிழ் மக்களை-பொது மக்களைக் கொல்லுங்கள்! அவர்கள்பீதிகொண்டு ஓடுவார்கள்! இந்தப்பீதி வேகமாகப் பரவும். இதன் மூலம் பொதுமக்களது ஆதரவை சின்னபின்னப்படுத்தலாம்!'' என்பது இஸ்ரேலியர்களின் ஆலோசனை.

இப்படித்தான் இஸ்ரேலியர்கள் பொதுமக்கள் குடியிருக்கும் பகுதிகளில் லெபனனிலும், மற்ற இடங்களிலும் குண்டு போட்டு மனிதத் தன்மையின்றி செயல்படுகிறார்கள்.

''தீத்திறத்தார் பக்கமே சேர்க!'' என்று தீ மூட்டினாள் கண்ணகி. ''இன்று போய் நாளை வா!'' என்றான் ராமன், அப்படி ராமாயண யுத்தம் நடந்த இலங்கையில் இன்று தர்மமின்றி குடும்பங்களை-குழந்தைகளைப் பெண்களைக் கொல்கிறார்கள்.

அநியாயத்திற்கு உடந்தையாக இருக்கும் இந்த இஸ்ரேலியர்கள் யார்?

### இஸ்ரேல் யார்?

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சொந்த நாட்டிலிருந்து விரட்டப்பட்டபோது இந்தியாவுக்கு-கேரளக் கடற்கரைக்கு அடைக்கலம் தேடி வந்தவர்கள். அவர்களுககுப் பாதுகாப்பு நல்கி மான்யம் வழங்கிப் பாதுகாத்தது அன்றைய அரசு. யூதர்களின் கோயில்கள் கள் இன்றும் நம் நாட்டில் இருக்கின்றன. அன்று அடைக்கலம்கொடுத்தோம். அணைத்தோம்

இன்று அணைத்த கையை அரிவாள் கொண்டு வெட்டுகிறார்கள்

கடந்த முப்பதாண்டுகளில் பாகிஸ்தான் இந்தியா மீது தொடுத்த போர்கள் மூன்று. ஒவ்வொரு முறையும் அமெரிக்க ஆயுதங்களுடன் இந்தியா மீதுபோர் தொடுத்த பாகிஸ்தான் இன்று யாருக்காக-யாரைக் கருத்தில் கொண்டு அணுகுண்டு தயாரிக்கிறது?

பாகிஸ்தானத்தில் அணுகுண்டு தளத்தை அனுமதிப்பதும் திரிகோணமலையில் அமெரிக்கக் கப்பற்படைக்கு இடம் தருவதும் இந்தியாவின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல. உலக சரித்திரம் - பிற நாடுகளின் உள்நோக்கம் - இவை எல்லாம் அறியாத அப்பாவிகளாக நாம் நெடுங்காலம் காலந்தள்ள முடியாது,

1982 ல் கொழும்பில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட போது, இந்திரா காந்தி இந்தியக் கப்பலை அனுப்பினார் அகதிகளை அப்புறப்படுத்த. ''இது எங்கள் விஷயம், எங்கள் ராணுவம் செய்யும்'' என்று செஞ்சிக் கூத்தாடினர் ஜெயவர்த்தன ''அதை இந்திய அதிகாரிகள் நிறைவேற்றுவார்கள்!'' என்று நிர்ப்பந்தித்தார் - மிரட்டினார் இந்திரா காந்தி என்ன நேருமோ என்று அச்சங் கொண்ட ஜெயவர்த்தன அதை ஏற்றுக் கொண்டார் ஆனல் இன்று?

இன்று என்ன நடக்கிறது?
யாரை யார் மிரட்டுகிறார்கள்?

''எது அயல்நாட்டு உரிமை, எது இனப்படுகொலை'' என்பதற்கு வித்தியாசம் தெரிந்தது இந்திராகாந்திக்கு. இளைஞர் ராஜீவ்காந்திக்கு வெளி விவகார ஞானம்போதாதோ என்றதோர் சந்தேகம் நமக்கு.

இலங்கைப் பிரச்னையில்ராஜீவின் அணுகுமுறையைக் கவனிக்கும்போது, ''ஏதோ இது ஒரு லாபநட்டப் பிரச்னை!'' என்று மூன்றும் மனிதர் போல பார்க்கும் போக்கு தென்படுகிறதே தவிர, இதிலுள்ள ஜீவப் போராட்டத்தின் காரணத்தையும், இதன் விளைவாகத் தென்னகத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளையும் அவர் கணித்திருப்பதாகத் தெரியவில்லை.

டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

சுதந்திரம் பெற்றதிலிருந்து, சர்வாதிகாரிகளாய் ஆட்சிபுரியும் பாகிஸ்தானத்து-ராணுவத்- தலைவர்கள் நாளைக்கு ஒரு பிரச்னை என்று வந்தால் என்ன செய்வார்கள் அணுகுண்டை இந்தியாவின் தலையில் போட மாட்டார்களா? பஞ்சாபைப் பிரிக்க வகை செய்ய மாட்டார்களா?

இதே போன்ற சந்தர்ப்பத்தில் அமெரிக்கா என்ன செய்தது?

அண்டை நாடான கியூபாவில் ஏவுகணைகளையும் அணுகுண்டையும் கண்டபோது, அமெரிக்கா தனது கப்பற்படையால் அந்நாட்டைச் சூழ்ந்தது. தளவாடங்களை ஏற்றி வந்த ரஷ்ய கப்பல்களை இறங்கவிடாமல் விரட்டியது. ஏவுகணைகளை அப்புறப்படுத்தி வெற்றி கண்டது. 1962 ல் இதை நியாயமாக உலகம் ஏற்றுக் கொண்டது!

இன்று நாம் என்ன செய்கிறோம்'

பாகிஸ்தான் சாதுரியமாகத் தனது அணுகுண்டு தளவாடங்களைப் பத்திரப்படுத்திக் கொண்டு, ''நாம் அதை அழிக்க மாட்டோம்!'' என்ற உடன்பாட்டை நம்மிடமிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் யார் புத்திசாலி?

மேற்கே பாகிஸ்தான்-
வடக்கே சீனா-
தெற்கே இலங்கை.

அந்த இலங்கையின் திரிகோணமலையில் அமெரிக்கக் கப்பற்படை!

டெல்லியில் அரசியல் சாணக்கியர்கள் இருக்கிறார்களா? இல்லை, அரசியல் அப்பாவிகள் இருக்கிறார்களா?

''இது இராணுவப் பிரச்னை அல்ல!'' என்று டெல்லி, தமிழர்களுக்குச் சமாதானம் சொல்லிக்கொண்டிருப்பதும், ரமேஷ் பண்டாரியின் போக்கும், சந்திரஹாசன் போன்ற தமிழ்த் தலைவர்களை இந்திய அரசு நாடு கடத்திய விதமும் தமிழருக்கு நம்பிக்கையாய் இருந்த ஜி. பார்த்தசாரதியைப் பேச்சுவார்த்தைகளிலிருந்து அப்புறப்படுத்தியதும், தமிழர்களின் உணர்வையும், நியாயத்தையும் டெல்லி மதிக்கவில்லை என்பதையே காட்டுகிறது.

வெளிநாட்டு விவகாரங்களில் ராஜீவுக்கு இருக்கும் கணிப்பைப் பற்றி நமக்குப் பலத்த சந்தேகம் ஏற்படுகிறது.

திருமதி இந்திரா காந்தி இன்று உயிருடன் இருந்திருந்தால் இவ்வளவு ஆணவத்துடன் ஜெயவர்த்தன பேசுவாரா, ஊரைக் கூட்டுவாரா? இவ்வளவு துணிச்சலாகப் பாகிஸ்தானும், இஸ்ரேலும், அமெரிக்காவும் நம் எலலைப் புறத்தில் நடமாடுமா என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். நம் அரசியல் தலைவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் ஏன் ராஜீவ் காந்தியே யோசித்துப்பார்க்க வேண்டும்.

### துரதிருஷ்டமாகும்

உலகத் தலைவர்கள் தாங்கள் எடுக்கும் முடிவுகளின் விளைவுகளிலிருந்து தான் பாடம் கற்றுக்கொள்கிறார்கள். ராஜீவ் காந்தி காலம் தாழ்ந்து ஞானம் பெற்றாலோ - தமிழர்

(5ம் பக்கம் பார்க்க)

## கடைசிநேர வரிவிளம்பரம்

**தேவை**

தேனீர்ச்சாலை ஒன்றுக்கு நல்ல அனுபவமுள்ள ரீமேகர் (Tea Maker) ஒருவர் உடன் தேவை. விபரங்கட்கு No: 6, Roich Coffee Centre பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு அருகாமையில், பஸ் நிலைய முன்பாக, யாழ்ப்பாணம்
(C1911)

ஐஸ் கிறீம் தயாரிப்பவர் தேவை. நேரில் வரவும். லிங்கம் கூல் அன் கோப்பிபார், 52, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம், (C1918)


## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன் செல்லையா பாலேந்திரா**

அன்னையின் மடியில்: 05-12-1963

அரக்கர் அழிப்பு: 22-04-1984

ஈராண்டு சென்றாலும் உன் இனியமுகம் மறையவில்லை, போராடச் சென்றாயோ? போர்முனை தான் கண்டாயோ? பாதிவழி தனிலே பாவிகள் பறித்தனரோ? அன்னையுனை அணைக்கவில்லை ஆழிதான் அணைத்தானோ? பாசமுடன் நாம் வளர்த்த பாலகனே பாலு.

உனதுநினைவால் துயருறும்

உற்றார், உறவினர், நண்பர்கள்.

அனலைதீவு.

C 1910


**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-45,
சிவகுமார்-ஜீவிதா
**கண்ணைத்திறக்கணும் சாமி**

**எம்பயர் 'B' சினிமா**
கமல் - ஸ்ரீதேவி
**சட்மா சித்தி**

**லிடோ Jaffna**
10-30, 2-30, 4-30 6-30
BODY AND SOUL
(Strictly for Adults)
(Colour)

2வது மாதம்
**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன் அம்பிகா, கவுண்டமணி நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)


## மாத்தளையில் பலி!

[கொழும்பு]

மாத்தளை நகரசபையின் முன்னாள் தலைவர் திரு. பி. தம்பிராஜா இனந்தெரியாதவர்களின் கைக்குண்டு வீச்சுக்குப் பலியானார்.

## யுத்த நிறுத்தம்---

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

### பண்டாரி சென்னை செல்வார்?

தற்போது இலங்கையினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆலோசனைகளை நன்றாக ஆராய்ந்த பின்னர் தமிழ் நாட்டிலுள்ள தமிழ்த்தலைவர்களின் கருத்தை அறிவதற்காக பண்டாரி சென்னை செல்வார் எனப் புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. தமிழ்த் தலைவர்களின் கருத்தைத் தெரிந்துகொண்ட பின்னர் திரு. பண்டாரி இந்தியப் பிரதமர் திரு. காந்திக்கு அவர்களின் கருத்தை விளக்குவார். அதன்பின்னரே திரு. பண்டாரியின் கொழும்பு விஜயம் பற்றித் தீர்மானிக்கப்படுமெனவும் இவ்வாட்டாரங்கள் கூறின.

### கொலைகள் நிறுத்தப்படவேண்டும்

எது எப்படி இருப்பினும். ராணுவத்தின் அடாவடித்தனங்கள் நிறுத்தப்பட்டுத் தமிழர்கள் கொலைகள் நிறுத்தப்படும்வரை இலங்கை அரசுக்கும், தமிழர் குழுக்களுக்குமிடையே எவ்வித பேச்சுவார்த்தைகளும் நடைபெறச் சாத்தியப்படாது என்ற இந்தியக் கொள்கையில் மாற்றமிராது என்பதால் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்குமாறு ஜனுப் ஹமீத் கேட்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. [ய-செ]

## 56-ம் நாள் நினைவஞ்சலி



**அமரர் கோகிலான் நாகேசு**

ஆண்டவன் படைப்பு: 10-03-1922

ஆண்டவன் அழைப்பு: 03-03-1986

எங்கள் இல்லத்தில் 22-4-1986-ல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், மற்றும்
உற்றார், உறவினர்.

தகவல்:
க. ஸ்ரீரஞ்சன் (கனடா)
1-ம் வட்டாரம்,
நயினாதீவு.

2-ம் வட்டாரம்,
நயினாதீவு. C 1916

ஆயுர்வேத வைத்திய பரீட்சை:

# யாழ். பல்கலைக்கழக சித்த வைத்திய பிரிவு நடத்தட்டும்!

[யாழ்ப்பாணம்]

ஆயுர்வேத வைத்திய (டி. ஏ. எம்.) இறுதிப் பரீட்சைகளை கொழும்பிலிருந்து ஆயுர்வேத ஆணையாளர் அவர்களின் பிரதிநிதிகள் இங்கு வந்து நடத்துவது சாத்தியமானது அல்ல என்றும் யாழ். பல்கலைக் கழக சித்த வைத்தியப் பகுதியினர் இப்பரீட்சையை நடாத்துவதற்கு உதவிபுரிய வேண்டும் எனவும் யாழ் அரசாங்க அதிபரை லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மாணவர் மன்றத் தலைவரும், பெற்றோர் நலன்புரிச் சங்கப் பிரதிநிதிகளும், சட்டத்தரணி சதாஸ்ரீனிவாசன் தலைமையில் அண்மையில் சந்தித்துக் கேட்டுக்கொண்டனர்.

மேற்படி கல்லூரி நிர்வாகத்தை நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்படாதவர்களும் நடாத்துகிறார்கள் என்றும் நீதிமன்றக் கட்டளை பல மாதங்களாக நிறைவேற்றப்படவில்லையென்றும் அதை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும் தெரிவித்தனர் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

1982ம் ஆண்டு தொடக்கம் சான்றிதழ் பத்திரங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. பரீட்சை நடாத்தப்படாததால் கல்லூரியை நடாத்திவந்த சட்டத்தரணிகள் குழு கலைக்கப்பட்டிருந்தது இதனால் மாணவர்கள் இன்று பல கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள்.

அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் இவற்றைக் கேட்ட பின்னர் மேற்படி குழுவினரிடம் தமக்கு விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். (ஐ)

## இலங்கைத்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பலி கொடுத்து அந்த அனுபவத்தைப் பெற்றாலோ- இந்தியாவின் எதிர்காலப் பாதுகாப்பைப் பறிகொடுத்து அனுபவம்பெற்றாலோ அது நட்டின் துரதிர்ஷ்டமாக முடியும்.

ராஜீவ் காந்தி எதையும் (Efficiency Expert) சுறுசுறுப்பு நிபுணரைப் போல விஷயங்களை அணுகுகிறார். தர்க்கவாத ரீதியாக விஷயங்களை அணுகுகிறார். ஆனால் உலக சரித்திரங்களும், சம்பவங்களும் தர்க்கவாத அறிவுக்கு அப்பாற்பட்டவையாக-பல இருக்கின்றன.

ஹார்வார்டு பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த ஒரு விவாதஅரங்கில்ஒருஆபிரிக்க நாட்டுத்தலைவரைக் கேட்டார்கள் ''மகாத்மா காந்தி சாத்வீகப் போராட்டத்தின் மூலம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே எதிர்த்து வெற்றி கண்டபோது நீங்கள் சின்ன டச்சு ஆதிக்கத்தை எதிர்க்க ஏன் பலாத்காரத்தை உபயோகிக்கிறீர்கள்?'' என்று.

அதற்கு அந்த ஆபிரிக்க நாட்டுத் தலைவர் பதில் கூறினார்: ''அது எதிரியின் தரத்தைப் பொறுத்தது. பிரிட்டிஷ் நாட்டுத் தலைவர்கள் ஜனநாயகப் பண்பாடு கொண்டவர்கள்!''

ராஜீவ்காந்தியும், நமது அரசியல்தலைவர்களும் நமது எதிரிகளின் தரத்தைக் கவனிக்க வேண்டும்.

சமீபத்தில் ஜெயவர்த்தனா துக்ளக் இதழில் 'சோ'வுக்கு ஒரு பேட்டி அளித்திருக்கிறார். பொறுமையாக அதைப் படிக்கும் யாரும் ஒரே ஒரு முடிவுக்குத்தான் வரமுடியும். 'உடன் பாட்டுக்கு வர மனிதருக்கு உண்மையான விருப்பமில்லை. தமிழர்கள் ஆயுதங்களை எல்லாம் போட்டுவிட்டுவந்தால், அடிமைகளாகஏற்றுக்கொள்ள இசைவார்' என்கிற முடிவுதான் அது.

இந்திய அரசு புத்தா, காந்தி வழி வந்ததாம். இவர் விஷயம்வேறாம். அதை அவர் தீர்மானிப்பாராம்!

இந்திய அரசு விடுதலைப்புலிகளை இவர் கையில் பிடித்து ஒப்படைக்க வேண்டுமாம். பின் இவர் தமிழர் பிரச்னைக்கு வழி செய்வாராம்! எப்படி?

எந்தத் தைரியத்தில் இவர் இப்படிப் பேசுகிறார் என்பதை யோசித்துப் பாருங்கள். யார் கொடுக்கும் தைரியம்]

ஒரு நாடு கொள்கைகளால் ஆளப்படுவதில்லை. தலைவன் என்ற தனிமனிதனால்ஆளப்படுகிறது. அவனதுவிருப்புவெறுப்புக்களால், அவனது ஆணவத்தால் ஆளப்படுகிறது. இத்தகைய தரங்கொண்ட தலைவர் இலங்கையை ஆளும் போது நியாய வாதங்களை உபயோகிப்பதில் அர்த்தமில்லை.

நாம்நமது வியூகத்தை உபயோசிக்க வேண்டும். அவரவர்களுக்கு புரிகின்ற மொழியில் பதில் பேசவேண்டும்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை இலங்கை ஜெயவர்த்தனா இன்று ஆழம்பார்ப்பதைப்போல 42 வயது கொண்ட இளம் கென்னடியை—அமெரிக்க ஜனாதிபதியை ரஷ்ய நாட்டுத் தலைவர் குருஷ்சேவ் 1962 ல் ஆழம் பார்த்தார்.

கென்னடி என்ன செய்தார் தெரியுமா?

நன்றி: ஜூனியர் விகடன்

## போராளிகள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

செல்வச்சந்நிதி கோவிலடியில் பல வீடுகள, மடங்கள் எரிந்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து வல்வை வந்துகொண்டிருந்த மினிவான்ஒன்று ஹெலிகாப்டர் சூட்டுக்கு இலக்காகியதால் போக்குவரத்துச் சேவைகள் தடைப்பட்டன. வானத் தாக்குதலால் பொதுமக்கள் சிலர் காயமடைந்து ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்,

## நயினைவிஜயம் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிடுவதற்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தலைமையில் எதிர்வரும் 24-ம் திகதி செல்லவிருந்த குழு தனது விஜயத்தைப் பின்போட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலை காரணமாக இவ் விஜயம் பின்போடப்பட்டுள்ளதுஎன்று யாழ் செயலக பொதுசனத் தொடர்பு அதிகாரியும், நாகபூஷணி அம்மன்ஆலய அறங்காவலர் சபைத் தலைவருமான திரு. த. குலசேகரம் தெரிவித்தார். [வா]


## பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியா, குவைத், ஈராக், அபுதாபி
ஆகிய நாடுகளுக்கு தொழிலாளர், மற்றும் தரத்திலுள்ளவர்களுக்கும், சாரதிகளுக்கும் பிரயாண வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

சவூதி அரேபியா, குவைத்துக்கு
பெண்களுக்கான பிரயாண வசதி
செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகொள்ளவும்:
**திருமதி ச. பவானி,**
**ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை,**
**இணுவில்.**

[C-1913]


புனிதமான இயக்கங்களுக்கு
கோண்டாவில் பகுதியில் உள்ள
21 பொதுஸ்தாபனங்களின்

## பணிவான வேண்டுகோள்

(05-03-86) புலவர் வீடியோ நிறுவனத்தில் நடந்த கொள்ளை மிகவும் கண்டிக்கத்தக்கதும் மனவருத்தத்துக்கு உரியதுமாகும் புலவர் ஓர் ஏழைத்தொழிலாளி. சொந்த நிலமோ அல்லது சொந்த மூலதனமோ இல்லாதவர். இவரது வீட்டில் கொள்ளைபோன பொருட்கள் அனைத்தும் கடன்பட்ட மூலதனமே இப்போது தனது தொழிலைத் தொடர்ந்து நடாத்தாத நிலையில் உள்ளார் அன்றாட வாழ்க்கையை நடாத்த மிகவும் கஷ்டப்படுகிறார் இவரது இந்த இக்கட்டான நிலையைப்போக்க புனித இயக்கங்கள் முன்வரவேண்டும். கொள்ளைபோன பொருட்கள் அனைத்தையும் கொடுக்காவிட்டாலும் தமது தொழிலை தொடர்ந்து நடத்தவும் அன்றாட வாழ்க்கையைக் கவனிக்கவும் ஒரு சில பொருட்களையாவது மீளப் பெற வழிசெய்யுங்கள். அல்லது கொள்ளையிடப்பட்ட பொருட்களை இவரிடம் ஒப்படைத்துவிட்டு அதற்காக அவர்கள் கோரும் பணத்தொகையை வாங்கிக் கொடுங்கள். இவரது பரிதாபத்திற்குரிய நிலையைக் கருத்தில் கொண்டு செயல்படுவீர்கள் என நம்புகிறோம்.

நன்றி.

எஸ். ஆனந்தராஜா,
பொதுஸ்தாபனங்களின் சார்பில்,
மத்திய கிராம முன்னேற்றச் சங்கம்,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

[C 1914]

# கனேடிய உயர்ஸ்தானிகர் தெரிவிக்கும் ஒருவிளக்கம்

அண்மையில் இலங்கையில் உள்ள கனேடிய உயர் ஸ்தானிகர் டி. எம் கொல்லா கொட் வடபகுதிக்கு விஜயம்செய்திருந்தபோது அவர் தொடர்பாக 'ஈழநாடு'வில் வெளியாகியிருந்த செய்திகள் பற்றி திரு. கொல்லா கொட் அனுப்பியுள்ள விளக்கம் கீழே தரப்படுகின்றது.

''ஈழநாடு மார்ச் மாத 13ந் திகதிய நாளிதழில் ''யாழ்ப்பாண மாநகரசபை தீயணைப்புச்சேவை அங்குரார்ப்பண வைபவத்தையிட்டும் அவ்வமயம் நான் ஆற்றிய உரையையும் பிரசுரித்திருந்தீர்கள். தாங்கள் இந்த வைபவத்தை விரிவாகப் பிரசுரித்தமைக்குப் பாராட்டுத் தெரிவிப்பதுடன்இரண்டொரு இடங்களில் எனது குறிப்புகள் தவருகப் பிரசுரிக்கப்பட்டமையால் தப்பான அபிப்பிராய மேற்பட ஏதுவுண்டாகையால் அவற்றைத் திருத்த விரும்புகிறேன்.

தங்கள் செய்தியில் 'இந்த அனுமதியை மந்திரிசபை மட்டத்தில் பெறவேண்டிய நெருக்கடிநிலை இருந்தபோதிலும், அனுமதியை விரைவில் பெறக்கூடியதாக இருந்தது'' எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். எனது உரையில் சிறுதிட்டங்களுக்கான எமது மட்டுப்படுத்தப்பட்ட தொகையிலும் பார்க்கக் கூடிய தொகை இந்த தீயணைக்கும இயந்திரத்துக்கானதாகையால் கனடாவிலுள்ள எமது தலைமை அலுவலகத்திலிருந்து அனுமதி பெறவேண்டியிருந்ததெனவும் மேலும் இங்கிலாந்திலிருந்து இதனைத் தருவிக்கவேண்டியிருந்தமையாலும் காலதாமத மேற்பட்டதெனக் குறிப்பிட்டேன். இலங்கை அமைச்சரவையையிட்டு நான் ஒரு இடத்திற் குறிப்பிட்டமை எவ்வாறெனில்: அன்பளிப்பு மாநகரசபைக்கு வழங்கப்படுவதால் அமைச்சரவை அங்கீகாரம் தேவைப்பட்டதெனவும் ஆனல் அது வெகு விரைவிற் பெறப்பட்டதென்பதாகும்.

தங்கள் செய்தியில் இன்னெரு இடத்தில்,

' யாழ்ப்பாணத்திற்கு இம்முறை வந்தபோது இங்கு ஒரு சிறு குடிசை தீப்பற்றி எரிந்ததைக் காண்பித்தீர்கள். இப்படியான சம்பவம் இனிமேல் இங்கு தொடர்ந்து நடக்காது என நான் நம்புகின்றேன். இனிமேல் யாழ்ப்பாணத்தில் நூலகங்கள் எரியவிடாமல் தடுப்பதற்கு தீயணைக்கும் யந்திரத்தை வழங்கியது போல் நூலகத்திற்கு கனடாவில் வெளியிடப்பட்ட புதிய கலைக்களஞ்சியம் ஒன்றை அன்பளிப்புசெய்கின்றேன்'' என நான் கூறியதாக குறிப்பிட்டிருந்தீர்கள்.

குடிசை எரிவதையிட்டு நான் கூறியதென்னவெனில் [தீயணைப்புச்சேவை நடாத்திக் காண்பித்தலின் ஒருபகுதி] எனது உரையில் முதலில் ஹாஸ்யமாக எனக்கு ஒவ்வொரு முறையும் யாழ்ப்பாணம் வரும்போது அளிக்கப்படும் வரவேற்புகளைப் பற்றியாகும். எனது குறிப்புகளின் முடிவில் கலைக்களஞ்சியத்தை அன்பளிப்புச் செய்தபோது எரியும் குடிசையைப்பற்றி நான் கூறவில்லை. எனது உரையின்போது ஹாஸ்யமாக இந்த தீயணைக்கும் இயந்திரம் நலல வழியில் உபயோகிககப் படுமெனவும் அது ஒரு வைத்தியசாலையிலுள்ள அவசர சிகிச்சை வார்ட்டைப் போன்றதெனவும் ஆகவே இதனை அடிக்கடி நீங்கள் உபயோகிக்கச் சந்தர்ப்பம் ஏற்படாதென நம்புவதாகவும் குறிப்பிட்டேன், இந்த எனது குறிப்பு ''இந்தத் தீயணைக்கும் இயந்திரம் அடிக்கடி உபயோகிக்கும் சந்தர்ப்பம் ஏற்படக் கூடாது'' எனத் தப்பாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

முடிவாக, நான் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட விஜயம் மிகவும் பயனுள்ளதாயிருந்ததெனவும், விசேடமாக மாநகரசபையினுலும், நான் சந்தித்த மற்றைய அமைப்புக்களாலும் எனக்களிக்கப்பட்ட வரவேற்பினையும்பாராட்டுகிறேன் கொழும்பிலுள்ள தூதரகப்பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும்போது அவர்கள் கூறும் எந்தவொரு கூற்றும் தப்பாக விளங்கப்படக்கூடாது என்பதனைத் தாங்கள் ஏற்றுக் கொள்வீர்களென நினைக்கிறேன். ஆகவே இக்கடிதத்தின் பிரதியினைத் தங்கள் பத்திரிகையில் பிரசுரித்தால் நன்றியுள்ளவனுவேன.

குறிப்பு:

கொழும்பிலுள்ள தூதரகப் பிரதிநிதிகள் மாத்திரமல்ல வேறு எவரதுகூற்றாயிருந்த போதிலும் அதனைத்தப்பாக பிறர் விளங்கிக்கொள்ளும் விதத்தில் பிரசுரிப்பது எமது மரபுஅல்ல. இருந்தபோதிலும், இன்றையசூழ்நிலையில் ஆங்கிலமொழியில் தெரிவிக்கப்படும் மிக நுணுக்கமான ஹாஷ்யக் கருத்துக்களை சரியான தமிழில் கொடுக்க முயலும்போது செய்தியாளர்கள் இப்படியான சிக்கல்களை எதிர்நோக்கவே செய்வர். [ஆ-ர்)

# இன்றைய பலன்

மாதம்- சித்திரை
திகதி- 9 (22 - 4 - 1986)
கிழமை- செவ்வாய்
திதி- திரயோதசி
மு. இ. வரை
நக்ஷத்திரம்- உத்தரம்
பி. ப. வரை

மேடம்: அவசரப் போக்கினல் அதிகாரிகளைப் பகைத்துக் கொள்வீர்கள். எதற்கெடுத்தாலும் ஆத்திரம் ஏற்படும். தவறுன வழிமூலம் பணம் பாழாகும்

இடபம்: மனம் போல் வாழ்வு இன்று மலரும் கடமையாற்றும் இடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். சிலருக்கு முயற்சியால் முன்னேற்றம் உண்டு.

மிதுனம்: உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும்' உற்சாகமாக கடமையாற்று வீர்கள் உவகையும் சேரும்.

கடகம்: மெத்தவும் பொருள் சேரும் மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிட்டும். தித்திக்கும் செய்தியுடன் தேனுன வாழ்வு முண்டு.

சிங்கம்: உறவு முறைகளில் வெடிப்பு ஏற்படும். பண விவகாரத்தின் மூலம் பகை தோன்றலாம்.தொழில் துறையில் அதிக கவனம் செலுதத வும்.

கன்னி: பேச்சுவார்த்தைகளில் உணர்ச்சி வசப்படாதிருப்பது விரும்பத்தக்கது. அவசர முடிவு ஆபத்தைதரும் அவதானம் நன்று.

துலாம்: பொருளாதாரத் துறை சீராகும். கொடுக்கல் வாங்கல் மூலம். அதிக ஆதாயத்திற்கு இடம் உண்டு. குடும்சத்தில் மகிழ்ச்சி நிலவும்.

விருச்சிகம்: எதிலும் அலட்சிய மனப்பான்மைதோன்றும். பகோதர வழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு. இனபந்துக்களின் தொல்லைகள் அதிகரிக்கும்.

தனுசு: பந்த பாசங்கள் உங்களைப் பரவசப்படுத்தும். உறவினர்கள் உற்சாகமான வரவேற்பைக் கொடுப்பார்கள். கல்வித்துறையில் அதிக ஈடுபாடு ஏற்படும்.

மகரம்: கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும். இலட்சிய நோக்குடன் காரியமாற்றுவீர்கள் இனசனக் கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு.

கும்பம்: மனதில் அமைதி குன்றும். எதிரிகள் எக்காளமிடுவர். மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும்.

மீனம்: காதலர்களுக்கு கன குஷியான தினம் பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும்.

திருமலை
வே. ரவீந்திரன்

# மன்னாரில் 'மரணதண்டனை'

(மன்னார்)

இயக்கமொன்றைச் சாட்டி சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்ட ஒருவருக்கு அவ்விடுதலை இயக்கம் மரண தண்டனை விதித்துள்ளது.

மரண தண்டனைக்குள்ளான இந்நபரின் சடலம் நேற்றுமுன் தினம்காலைமன்னார் தண்ணீர்த் தாங்கிக் கட்டிடத்துக்கருகாமையிலுள்ள கம்பம் ஒன்றில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் கட்டப்பட்டிருக்கக் காணப்பட்டது.

மன்னார் பொலிசார் இச்சடலத்தை எடுத்துச் சென்று ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர். [மா]


## இல்லத்தரசிகளே!

## சவரின் பார் சோப் வாங்கி ஒவ்வொரு பாரிலும் சேமியுங்கள்.

இந்தச் சவர்க்கார உறையை
திருப்பிக் கொடுங்கள்
புதிய சவர்க்காரம் ரூபா 1/-
கழிவு தொகையில் கிடைக்கும்




இலகுவானதும், சிக்கனமானதுமான சவரின் பார் சோப்பிலுள்ள கழிவுத்தொகைக் கூப்பன் - நீங்கள் பனத்தைச் சேமிக்க உதவுகின்றது.

உங்கள் வாடிக்கையாளரிடம் மீண்டும் சவரின் பார் சோப் வாங்கும்பொழுது மேலுறைக்கூப்பனைக் கொடுத்து ரூபா 1/- கழிவு பெறுங்கள்.

விலை ரூ.15/-

விரையுங்கள்: இந்தச் சலுகை - சில நாட்களுக்கு மட்டுமே.

அரசுடைமையாக்கப்பட்ட
பிரிட்டிஷ் சிலோன் கோப்பறேஷன் லிமிட்டெட்
ஹல்ஸ்ரொப் மில்ஸ், கொழும்பு - 12.
தொலைபேசி: 22111/5

சவரின் பார் சோப் நூற்றுக்கு நூறு சுத்தமான தேங்காய் எண்ணெயில் தயாரிக்கப்பட்டது.

ZENITH

# இடமாற்றம் பெறும் ஆசிரியர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுவரும் பிற மாவட்ட ஆசிரியர்களின் விபரத் தொடர்ச்சி வருமாறு:-

123. திரு. ரி. சிவகுமாரன் தாரபுரம், 124. திரு. வி. பாலேந்திரன் அடம்பன். 125. திரு. ஆர்.ஏ.சிவதாசன் சிலாவத்துறை. 126. திரு பி. சிவசுந்தரம் முரிச்சுகட்டி, 127. திரு. பி குகநாதன் முருங்கன், 128. திரு வி. சண்முகலிங்கம் மன்னார், 129. திரு எ. ரவீந்திரநாதன் பேசாலை, 130. திருமதி.பி. சிவகுமாரன் எருக்கலம்பிட்டி, 131. திரு. கே விஞயகமூர்த்தி மன்னார், 132 திருமதி. எம்.எம். நிக்கலஸ் மன்னார், 133. செல்வி எல். ஜி. மசக்கீன்பிள்ளை மன்னார், 134. செல்வி. கே. சரஸ்வதி மன்னார், 135. செல்வி. எம். தம்பு இலுப்பக்கடவை, 136. செல்வி. பி.தர்மராசா முருங்கன், 137. திருமதி. வி. பாலசுப்பிரமணியம் கல்முனை, 138. திரு. ரி. சிறிஸ்கந்தராசா ரத்தோட்டை.

## பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்கள்

139. செல்வி. எம். நாகலிங்கம் தெமோதர, 140. திருமதி எஸ், முத்தையா பசறை, 141. திரு.வி.ஏ.செல்வநாயகம் மடலுகம 14?. திருமதி. எஸ். யோகநாதன் கஹட்டகஸ்திகிலியா, 143 திருமதி வி. முருகதாசன் பன்குளம், 144. திரு ஏ. துரைராசா சிலாபம், 145. செல்வி.ஏ.என், நடராஜா புத்தளம், 146 செல்வி. எஸ். வி. புனிதமலர் வவனியா, 147. திரு.எம். கந்தப்பு வவனியா, 148. திரு. என். சண்முகானந்தா வவனியா, 149. செல்வி. எல். சுந்தரமூர்த்தி வவனியா, 150. செல்வி. ஜே. பரமநாதன் புவரசங்குளம், 151. ஜனுப். எம்.ஏ.எஸ். அசீம் வவனியா, 152. திருமதி.எம். சிவசிதம்பரம் முல்லைத்தீவு, 153. திருமதி. ஆர் குணதீசன் வவனிக்குளம், 154. திரு. ஜி. எஸ். ஶ்ரீகரன் பளை, 155 திரு. கே. ஜெகநாதன் கண்டாவளை, 156. திரு.கே, கனகேஸ்வரன் முரசுமோட்டை, 157. திரு. எஸ். டொமினிக் மன்னார், 158. திருமதி.எம். பாலேந்திரன் மன்னார், 159, செல்வி.கே. தில்லையம்பலம் இலுப்பக்கடவை, 160. செல்வி பி. ரட்ணம் வட்டக்கண்டல், 161. திரு.பி.நாகரத்தினம், நானுட்டான்' 162. திருமதி. பி. சிவகுருநாதன் மன்னார், 163. திரு. வி. சிவகுருநாதன் உயிலங்குளம், 164. செல்வி. ரி. செல்லத்துரை மன்னார், 165. திருமதி. ரி.வி.வேலாயுதம்பிள்ளை பேசாலை, 166, திருமதி. சிவராஜசுந்தரம் நானுட்டான், 167. திரு.கே.நடராசா நுவரெலியா, 168 திரு. என. ரவீந்திரன் கல்கரஹேயா, 169. திருமதி, கே. சிவலிங்கதாசன் ஹட்டன் 170 திருமதி. எஸ். ராஜேந்திரன் பொகவந்தலாவ, 171 திரு. எஸ். சிறி இராமச்சந்திரன் பூண்டுலே யா, 172 செல்வி. எஸ். செல்லையா லிண்டுல, 173. செல்வி. எஸ் ஏ சி.ருக்ஷான் காக்கையன்குளம்.

## பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள்

174. திரு. எஸ். சுந்தரமூர்த்தி தலவாக்கொல்ல 175. திரு.வை ஏ. போலிஸ் நனுஓயா, 176. செல்வி பி. செல்லப்பா ஹட்டன், 177. செல்வி. வி. நாகமுத்து ஹப்புத்தளை, 178. திரு, எஸ். பாலகிருஷ்ணன் பண்டாரவளை, 179, திரு. என். எம். ஜெயசிங்கம் நிலாவெளி, 180. திரு. எஸ். தர்மகுலசிங்கம் முல்லிபொத்தன.

181 திரு. எஸ். ஐ. குமாரசுவாமி, தம்பலகாமம், 182 திரு சி. பரராசசிங்கம், கின்னியா, 183 திரு. ரி பொன்னம்பலம், மூதூர், 184 திரு கே. சண்முகசுந்தரம், நானுட்டான், 185 திரு. வி. குமரேஸ்வரதாஸ் இலுப்பைக்குளம், 186 செல்வி சி.சுப்பிரமணியம், இலுப்பைக்கடுவ, 187 செல்வி கே. தப்பிஐயா, எருக்கலம்பிட்டி, 188 திரு. கே. சிவசுப்பிரமணியம், வவனியா, 189 திரு. கே.வி. குருநாதன், வவனியா, 190 திருமதி கே. கமலநாதன், கிளிநொச்சி, 191 திரு கே.சிவாஜி கிளிநொச்சி, 192 திருமதி எஸ் கனகலிங்கம், கிளிநொச்சி, 193 திரு எம்.விஜயகுமார், மாங்குளம், 194 திரு எம்.எஸ் சிதம்பரநாதன், முல்லைத்தீவு, 195 திரு வி இரத்தினசிங்கம், யோகபுரம், 196 திரு சி.காராளகுலசிங்கம், யோகபுரம், 197 செல்வி ஜே.நேசரத்தினம், முல்லைத்தீவு, 198 திருமதி ஐ.இராமனுதன், புத்தளம், 199 திரு.பி. முத்துக்குமாரசுவாமி, பலாங்கொட, 200 திரு.வி. ஆழ்வாப்பிள்ளை, பெரியபுல்லுமலை, 201 திரு. தம்பிப்பிள்ளை, வாழைச்சேனை, 202 திரு எம்.பரிமளசிங்கம், பலாங்கொட 203 திரு ஏ.துரைசாமி, பொகவந்தலாவ, 204 திரு எஸ்.லிங்கநாதன், அநுராதபுரம், 205 திருமதி எஸ் கனகரட்ணம், முள்ளிட்டி ராத்தனை, 206 திரு ஏ. டபிள்யு ஜேசுதாஸ், மன்னார், 207 திரு ஏ தனபாலசிங்கம், மன்னார், 208 திரு பி. பூரணநந்தன், மன்னார், 209 திரு ரி. மகாலிங்கம், சேமமடு, 210 திரு ரி.ஐ சுப்பிரமணியம், பாணந்துறை.

(மிகுதி நாளை)


# LANKA CEMENT LIMITED
## KANKESANTHURAI.

### முருங்கன் களிமண்ணுக்குச் சமமான களிமண் யாழ். மாவட்டத்தினுள் தேடி எடுத்து லங்கா சிமெந்து லிமிட்டெட்டுக்கு விநியோகித்தல்

எமது விரிவான ஆய்வின் பயனுக யாழ்ப்பாண மாவட்டத்தில் முருங்கன் களிமண்ணுக்குச் சமமான களிமண் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. எனவே மேற்படி களிமண்ணை எமக்கு விநியோகிக்க ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்கள் கீழ்க்கண்டவாறு எம்மைத் தொடர்பு கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

1. ஒப்பந்தக்காரர்கள் தங்கள் களிமண் எடுக்கும் பிரதேசத்தினைக் காட்டும் ஒரு சாதாரண வரைபடம் (LOCATION DRAWING) ஒன்றை அமைத்து கீழ்க்காணும் கேள்விப்பத்திரத்துடன் அனுப்பவேண்டும்.
2. வரைபடத்தில் காட்டப்பட்ட பிரதேசத்தில் எடுக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிலோ நிறையுடைய 3 களிமண் மாதிரிகள் பெயர், சுய விலாசமிட்டு எடுக்கப்பட்ட பிரதேசத்தின் பெயர் கேள்விப்பத்திர இலக்கமான LCL/SU/T/01/86 குறித்து அரக்கு முத்திரையிட்டு 25-04-1986 காலை 10-30 மணிக்கு முன் கேள்விப்பத்திரத்துடன் 'உதவிப் பொதுமுகாமையாளர்' காரியாலயத்தில் சேர்ப்பிக்கவும்.
3. ஒப்பந்தக்காரர்கள் வெவ்வேறுஎத்தனை பிரதேசங்களிலும் இருந்து களிமண்ணை விநியோகிக்கலாம். ஆனுல் களிமண் எடுக்கப்படும் ஒவ்வொரு பிரதேசத்தினதும் சாதாரண வரைபடத்துடன் (LOCATION DRAWING) ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிலோ நிறையுடைய 3 களிமண் மாதிரிகள் ஒவ்வோர் பிரதேசத்தில் இருந்தும் பெறப்பட்டு மேற்குறிப்பிட்டபடி பிரதேசத்தின் பெயர், ஒப்பந்தகாரரின் பெயர், சுய விலாசம், கேள்விப்பத்திர இலக்கம் என்பன எழுதப்பட்டு கேள்விப்பத்திர முடிவு நாளாகிய 25-4-86 காலை 10-30 மணிக்கு முன் எமது உதவிப் பொதுமுகாமையாளர்காரியாலயத்தில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.
4. (I) மேற்படி களிமண்ணை எடுக்கப்படும் பிரதேசத்தில் விநியோகிப்பதற்கான 1 தொன்னுக்கான விலைக்கூறு.
   (II) மேற்படி களிமண்ணை அப்பிரதேசத்திலிருந்து ஏற்றி எமது தொழிற்சாலைக்கு கொண்டுவந்து எமது களிமண்சாலையில் இறக்குதல் தொன் ஒன்றுக்கான விலைக்கூறு.
   (III) நாள் ஒன்றுக்கு விநியோகிக்கக்கூடிய மிகக்குறைந்த தொகை களிமண் தொன்னில். மேற்படி விலைக்கூறுகளை தங்களால் தயாரிக்கப்பட்ட 2 பிரதிகள் கொண்ட படிவங்களில் தயாரித்து அரக்கு முத்திரை இடப்பட்ட 9''X4'' அளவு கொண்ட உறையில் இட்டு

"உதவிப் பொதுமுகாமையாளர்",
லங்கா சிமெந்து லிமிட்டெட், காங்கேசன்துறை

என்ற விலாசமிட்டு உறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்விப்பத்திர இலக்கமான LCL/SU/T/01/86 எழுதி 25-04-1986 காலை 10-30 மணிக்கு முன் உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்ப்பிக்கவும். மேற்படி கேள்விப்பத்திரங்கள் கேள்விப்பத்திர முடிவு நேரமாகிய 10-30 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும்.

மேற்படி விடயமாக மேலும் தகவல்களைப் பெற விரும்புவோர் விநியோக அதிகாரியை அவரது காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் சந்திக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுமுகாமையாளர்,
## லங்கா சிமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

09-04-1986. (A 432)


## "லிபியா மீதான தாக்குதல்:
# இலங்கை அரசு தன்னை இனங்காட்டிவிட்டது"

[யாழ்ப்பாணம்]

"லிபியா நாட்டின் மீது அமெரிக்கா நடத்திய விமானத்தாக்குதல் மிலேச்சத்தனமான ஒன்றுகும் சுதந்திரமும் இறைமையும் கொண்ட ஒரு நாட்டின் மீது இவ்வாறு காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்ள அமெரிக்காவிற்கு என்ன உரிமை இருக்கிறது. அமெரிக்காவின் இத்தாக்குதலும் அதன்பின் றேகன்வெளியிட்ட கருத்துக்களும் உலகின் அரசபயங்கரவாத சக்திகளின் ஏகத்தலைவன், அமெரிக்காவே என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன."

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியின் (இடது) அரசியல் குழு சார்பாக அதன் பொதுச்செயலாளர் திரு கே. ஏ. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அறிக்கை மேலும் தெரிவிப்பதாவது:

"அமெரிக்காவின் ஏகாதிபத்திய கொடூரச் செயல்களையும் அது கொண்டிருக்கும் பயங்கர நச்சுத்தனங்களையும் நாம் எப்பொழுதும் எதிர்த்துவந்திருக்கின்றோம். அதே போல் நமது நாட்டின்மீது அது தொடர்ச்சியாக நடத்திவரும் ஆதிக்கம், ஊடுருவல், குழிபறிப்பு, சதி என்பவற்றையும் சுட்டிக் காட்டி வந்துள்ளோம். ஆதலால் அமெரிக்காவின் சுயரூபம் இன்று நமது மக்களுக்கு மிகத்தெளிவான ஒன்றுகும். அமெரிக்கா தனது வல்லரசு மேலாதிக்கப் போட்டியில் பலம் குறைந்த மூன்றும் உலக நாடுகள் மீது ஆக்கிரமிப்பையும், தாக்குதல்களையும் நடத்தித் தனதுபலத்தைக் காட்டிக் கொள்ள முனைகின்றது. கிறனடா ஆக்கிரமிப்பும், லிபியத்தாக்குதலும் இதையே நிரூபிக்கின்றன. இவ்விதமான அமெரிக்காவின் கோழைத்தன தாக்குதலுக்கு டகிரங்க கண்டனம் தெரிவிக்கத் தயங்கியதன் மூலம் இலங்கை அரசு தன் தோற்றத்தை வெளிக்காட்டியுள்ளது. அதுமட்டுமன்றி அரச பயங்கரவாதத்திற்குத் தனது தலைவன் அமெரிக்காவே என்பதனையும் இலங்கை அரசு ஒப்புக்கொண்டுள்ளது"


## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



K. S.
சுப்பிரமணியம்
(K. S. S.)
[முன்னுள் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியரும், விடுதி அதிபரும்]

தோற்றம்:- 21-03-1903
மறைவு:- 18-04-1985
திதி:- 6-05-1986

மாருத அன்போடும் மட்டற்ற மகிழ்வோடும் சீரொடு சிறப்பெய்திப் பேரொடு புகழும்பெற்று இப்புவி மீது பெருவாழ்வு வாழ்ந்திட்ட பெருந்தகையே, எம்மைப் பிரிந்து ஆண்டொன்று கடந்தாலும் நின் நினைவென்றும் எம் நெஞ்சை விட்டு நீங்காது.

"அன்னாரின் ஆன்மா சாந்தியடைவதாக"

நின்பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.
(C 1909)



## அறிவித்தல்

இடம்: காரைநகர்
தன்னை பிள்ளையார்
கோவில்

19-4-86
சீட்டிழுப்பு

1-வது பரிசு
துவிச்சக்கரவண்டி No 2001
குமரன் ரெக்ஸ்ரைல்ஸ்
(செந்தில்)

2-வது பரிசு
F பான் No. 7

3-வது பரிசு
றேடியோ No. 1187

குறிப்பிட்டபரிசை எதிர்வரும் 1-5-86க்கு முன் பெற்றுக்கொள்ளவும்.

செயலாளர்
C 1906

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
செவ்வாய்க்கிழமை— 22-4- 86

# இந்திய தேசியக் கட்சிகள் இலங்கைவருமாறு அழைப்பு!

(கொழும்பு)

இந்திய தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளை இலங்கை வருமாறு இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் திரு பேர்னுட்திலகரத்ன அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கைப் பிரச்னைதொடர்பாக திரு. திலகரத்ன முன்னுள் இந்திய வெளிவிவகார அமைச்சரும், பாரதிய ஜனதாக் கட்சித் தலைவருமான திரு. அடல்பிஹாரி வாஜ்பாயைச் சந்தித்தும் பேசிய போது இந்த அழைப்பைவிடுத்தார்.

உடனடியாக வரவேண்டியதில்லையென்றும், சில காலம் கழித்துச்சகல இந்தியதேசியக் கட்சிகளையும் உள்ளடக்கிய பிரதிநிதிகள் குழுவுடன் இலங்கை வருமாறும் திரு. வாஜ்பாயிடம் திரு. திலகரத்ன கேட்டுக்கொண்டார்.

இலங்கைக்கு இந்திய தேசியக்கட்சிகள் கொண்ட குழுவொன்று விஜயம் செய்யும் பட்சத்தில் இனப் பிரச்னையின் உண்மைநிலையை நேரடியாக அறிந்துகொள்ள முடியுமென்றும் திலகரத்ன தெரிவித்தார்

### வாஜ்பாயின் கருத்து

இதனிடையே திரு. வாஜ்பாய், இலங்கையின் இனப்பிரச்னை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்இலங்கைஅரசு தனது நண்பர்களைத்தானே தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றிருந்தாலும் இப்பிரச்னையைக்கையாள பாகிஸ்தான் இஸ்ரேல் ஆகியவற்றின் உதவியைப் பெற்றுள்ளதைக் கண்டித்தார். இது விஷயத்தில் இந்திய அரசு தீர்மான முடிவொனறை எடுக்கத் தவறும் பட்சத்தில் இலங்கை வேறுநா( களிடமும் உதவி கேட்க ஆரம்பித்து விடும் எனவும் அவர் கூறினர்.

தி. மு. க. தலைவர் திரு. கருணாநிதியினல் அடுத்த மாதம் கூட்டப்படவுள்ள இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றிய சர்வ கட்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்க க திரு வாஜ்பாய் தமிழகம் செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கட்சியின் சென்னைப் பிரிவு கோரிக்கை

இது இவ்வாறிருக்க இலங்கையின் இனப்பிரச்னைக்கு விரைவானதும்நிரந்தரமானதுமான ஒரு தீர்வினைக் காணுமாறு இந்திய பாரதீய ஜனதாக் கட்சியின் சென்னைப் பிரிவு இந்திய மத்திய அரசிடம கேட்டுக்கொண்டுள்ளது.

இக்கட்சியின்கூட்டமொன்று இம்மாதம் 16-ம் திகதி ஜயனுவரத்தில் கூடியபோது இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

[ய-செ]

## விடுதலை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்ட இரு ஆயுர்வேத டாக்டர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

டாக்டர் என். நடராசா, டாக்டர் வேலும்மயிலும் ஆகிய இருவருமே விடுவிக்கப்பட்டவர்கள். [மா]

# புதிய திட்டத்தில் எதுவுமில்லையாம்

[புதுடில்லி]

இலங்கை அரசாங்கத்தினல் இந்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய ஆலோசனைகளில், இலங்கைவாழ் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் புதியதாக ஒன்றுமில்லையெனத் தெரியவந்துள்ளது.

இவ்வாலோசனைகள் தற்போது இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியினல் நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட குழுவொன்றினல் பரிசீலனை செய்யப்பட்டு வருவது தெரிந்ததே.

இலங்கையின் ஜனதிபதி ஆட்சி முறையினுள் இந்திய யூனியன் பிரதேச அமைப்பு முறை போன்று இலங்கையிலும் யூனியன் பிரதேசங்களுக்கு எவ்வளவு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படலாம் என்பது பற்றி இலங்கை ஆராயும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது மாத்திரமே இதுவரை இலங்கையினல் வழங்கப்பட்ட முன்னைய ஆலோசனைகளுக்கும், புதிய ஆலோசனைக்கும் உள்ள வேறுபாடாகும்.

அதாவது இந்தியாவின் மாநில அமைப்பையன்றி வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட யூனியன் பிரதேச அமைப்பையே இலங்கை வழங்குமாம்.

இலங்கை அரசாங்கம் யூனியன் சபைகளை ஒரு பொது ஜன வாக்கெடுப்பின்றி பாராளுமன்றத்தில் தனது மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பிரயோகித்து ஸ்தாபிக்கும் அதேநேரத்தில் இச் சபைகள் தமதுஅதிகாரத்தை மீருத வண்ணம் ஜனதிபதியிடம் முழு அதிகாரங்களும் இருக்கத்தக்கவாறு இவ்வாலோசனைகள் அமைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

(ய-செ)

## மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில்

# காணமல்போன 341 பேர் பட்டியல் இன்று கையளிப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டு காணமல் போன 341 பேரின் விபரப்பட்டியல் ஒன்றை பிரஜைகள்குழு இன்று இணைப் பதிகாரியை சந்தித்து அவரிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

காணமல் போனவர்களுள் பெரும்பாலானேர் பட்டதாரிகளும், படித்த இளைஞர்களும் அடங்குவர்.

காணமல் போனவர்களின் விபரப்பட்டியலுடன் சத்தியக் கடதாசிகளும் இணைக்கப்பட்டுள்ளன. [மா]

# கந்தளாயில் பலியான 57 பேர் விபரம்

[திருமலையிலிருந்து நமது நிருபர்]

கந்தளாய்க்குளம் உடைப்பினல் மாண்டவர்களுள் இதுவரை 57 பேரின் விபரங்கள் தெரியவந்துள்ளன. ஆயினும் இவர்களுள் ஒருவரின் சடலம் மாத்திரமே கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தில் அள்ளுண்ட மூன்று இளம்பெண்கள் மாத் உரம் தமது சாதுரியத்தால் தியிர்தப்பி வந்துள்ளனர். இவர்களில் ஒருவர் திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### கோவில் இருந்தஇடம் தெரியவில்லை

கந்தளாய்ப்பிள்ளையார் கோவில் அத்திபாரத்துடன் அடித்துச்செல்லப்பட்டுள்ளது. இக்கோவில் வீதியில் வசித்த 15 தமிழ்க் குடும்பங்களும் காணமல்போய்விட்டதாக கவலை தெரிவிக்கப்பட்டுளது, இதில் ஒரு குடும்பத்தில் மட்டும் 12 பேர் அடங்குவா.

கோவில் இருந்த சூழல் ஒரே வெளியாகக் காட்சியளிக்கிறது. இப்பகுதியில் 35 அடி வெள்ளம் பாய்ந்திருந்தது. இப்பொழுது இது 5 அடியாகக் குறைந்துள்ளது.

வெள்ளப்பெருக்கினல் போக்குவரத்துக்கள் முற்றுமுழுதாகத் துண்டிக்கப்பட்டுள்ளன இதனல் உணவுப் பொருள்களின் விலை பன்மடங்காக அதிகரித்துள்ளது.

இறந்தவர்கள் அல்லது காணமல்போனவர்களில் இதுவரை கிடைத்தவர்களின் பெயர் விபரம் வருமாறு:

மார்க்கண்டு குடும்பம்3பேர், திருமதி ஜெகதீசன் குடும்பம் 2 பர், திருமதி அமிர்தலிங்கமும் ஆறு பிள்ளைகளும், திருமதி ஜீவானந்தமும் ஒருபிள்ளையும், நாகராசா (ஆசிரியர்), திருமதி தங்கராசாவும் 2 பிள்ளைகளும், திருமதி சிவப்பிரகாசமும் 4 பிள்ளைகளும், எம். அந்தோனியும் மனைவியும் 5 பிள்ளைகளும், திருமதி கே ராஜரட்ணமும் 5 பிள்ளைகளும், கந்தையவும் மனைவியும் 3 பிள்ளைகளும், திருமதி சித்திரவேலும் 3 பிள்ளைகளும், திருமதி கணேசலிங்கமும் ஒரு பிள்ளையும், திருமதி கேடீஸ், எம் பாக்கியம் வி மகேஸ்வரன், புலேந்திரனும் 3 பிள்ளைகளும், திருமதி இரத்தினசபாபதி.

தங்கவேலும் 3 பிள்ளைகளும். சிவப்பிரகாசம் இந்துமணி 16 வயதுப் பெண் (ஆசிரியை) இவருடைய இருசகோதரிகளே வெள்ளத்திலிருந்து தப்பிவந்தவர்களாவர்.

ஜெகதீசன் பிரேம்குமாரி (16 வயது) என்பவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்.

## கொழும்பில் நிவாரணப் பணிமனை

இதனிடையே கந்தளாயில் பாதிக்கப்பட்டவர்களுக்கென நிவாரணப் பொருள்களைச் சேகரிப்பதற்கான நிலையமொன்று கொழும்பு செப்பிட்டிப்பொல மாவத்தையிலுள்ள 'சமிட் பிளாட்ஸ்'ஸில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உடை, உணவு, மருந்துவகைகளை வழங்க விரும்புவோர் இந்நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [மா]

திரு. எஸ். ஸி. சந்திரகாகன் 'துக்ளக்' பத்திரிகைக்கு அளித்த பேட்டித் தொடர் நாளை வெளிவரும்.

## ஹர்த்தாலும் பீரங்கித் தாக்குதலும்

(புலோலி)

பருத்தித்துறை இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியான இரு போராளிகளுக்கும் அனுதாபம் தெரிவிக்குமுகமாக நேற்று திங்கட்கிழமை பருத்தித்துறையில் பூரண ஹர்த்தால அனுஷ்டிக்கப்பட்டது

நேற்று முன்தினம் பிற்பகல் வேளையில் பருத்தித்துறைக் கடலிலும் கற்கோவளம் கடலிலிருந்தும் கடற்படையினர் பயங்கர சத்தங்களுடனன பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இப் பீரங்கிக் குண்டுகள் புலோலி, தும்பளை வராத்துப்பளை, பருத்தித்துறை, உபயகதிர்காமம் பகுதிகளில் விழுந்து வெடித்தன இதனல் சில வீடுகளும் பனை மரங்களும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

## 'இராசு' வுக்கு அறிவிப்பு

[யாழ்ப்பாணம்]

சந்நிதி அசம்பாவிதங்கள் பற்றி இலங்கையிலுள்ள இந்துக் கோவில்களினதும் தாபனங்களினதும் பாதுகாப்புக்கான அமைப்புக் குழுவும் வல்வைப்பிரஜைகள குழுவும் சந்நிதி ஆலய தர்மகர்த்தாக்கள் குழுவும் நேற்று இந்து கலாசார அமைச்சர் திரு.செ. இராசதுரைக்கு தொலைபேசி மூலம் விபரமாக அறிவித்தனர். (ஐ)

## மரண அறிவித்தல்

### சங். சகோதரி டொறத்தி

சங். சகோதரி டொறத்தி 21-04-86ல் இறைவனடி சேர்ந்தார். இறுதிச் சடங்குகள் மயிலிட்டி புனித சூசையப்பர் மடத்தில் 22-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெறும்.

தகவல்: சகோ. மார்த்தா.

திருக்குடுப்ப மாகாண இல்லம்,
யாழ்ப்பாணம். [C-1921]

### திருமதி இராசேந்திரம் ஞானம்மா

இவர் நிக்கிளாப்பிள்ளை இராசேந்திரத்தின் அன்பு மனைவியும், கொர்னேலியஸ் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), லீலாமலர், சசிகலா, வனிதா, அருள்செல்வன், ஸ்ராலின், றெபின்சன், றேசலின், ஜோர்ச் குருசேவ் ஆகியோரின் தாயாரும், அந்தோனிப்பிள்ளை (இ போ ச.), எமிலியானுப்பிள்ளை ஏரோதுராஜா ஆகியோரின் மாமியாருமாவார். அன்னரின் பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் புனித மிக்கேல் ஆலயத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

உரும்பராய் கிக்கு, உரும்பராய். — கணவன், பிள்ளைகள். [C-1919]

### நவரத்தினம் கிருஷ்ணமூர்த்தி

அல்வாய் நவரத்தினம் கிருஷ்ணமூர்த்தி U K. இல் காலமாகிவிட்டார். இவர் Dr சதானந்தாம்பிகை [U. K] [முன்பு மட்டக்களப்பு அரசினர் வைத்திய சாலையில், வல்லை, மூளாய் ஸ்ரீலங்கா வைத்தியசாலை-கொழும்பு ஆகிய ஆஸ்பத்திரிகளில் வைத்தியசேவையாற்றிய செல்வி சின்னத்தம்பி] அவர்களின் அன்புக் கணவரும், நவலடி அல்வாய் நவரத்தினம் சரஸ்வதி தம்பதிகளின் அருமைப் புதல்வனும், சின்னத்தம்பி சிதம்பரம் ஆசிரிய தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி சொர்ணம்பிகை சதாசிவம் [ஆசிரியை] சத்தியமூர்த்தி [பொறியியலாளர் - Can da] சிவகுமாரன் [கணக்காளர் - U. K] திருமதி உருத்திராம்பிகை குணபாலசுப்பிரமணியம் [ஆசிரியை] திருமதி அகிலாம்பிகை கருணநிதி [U. K] திருமதி குகாம்பிகை சிவராஜா [ஆசிரியை - U. K] ஆகியோரின் அன்பு மைத்துனரும், சந்திரமூர்த்தி [U K] தட்சணமூர்த்தி [Denmark] திருமதி வசந்தராணி செல்வகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னரது ஈமக்கிரியைகள் U. K யில் நடைபெற்றன தயவுசெய்து உறவினர்கள், நண்பர்கள், அன்டர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்று அன்னரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேம் U K விலாசம்: Dr. Satha Crishnamoorthy, Rochford Hospital, Dalys Road, Rochford, Essex, U. K.

தகவல்: திருமதி சொர்ணம்பிகை சதாசிவம்,
[ஆசிரியை-ஞானசாரியர் கல்லூரி]

''பவன் இல்லம்'',
அல்வாய் தெற்கு, அல்வாய். [C-1902]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126,